உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௯.] சாதாரண-ஷு தைமீ. [பகுதி-௩.

1910

உ

திருச்சிற்றம்பலம்.

நூலாராய்ச்சி.

(கம்பராமாயணம்.)

உலகில் வழங்கும் பாஷைகள் பல. அவ்வப்பாஷைக்குரியராகப்பல சான்றோர் பற்பல காலங்களில் தோன்றிக் கடவுளின் திருவருட்பேறுடையராய்த் தந்நுண்ணறிவின் பயனாய நூல்களியற்றி அதனால் அப்பாஷைக்கும் தமக்கும் மிக்க சிறப்புண்டாக்கியுள்ளாரென்பது யாவரும் நன்கறிந்ததேயாம். அவராலியற்றப்பட்ட நூல்கள் பல்வகை நயங்களும் பொருந்தி நீண்டகாலமாய்ப்பல்லோராலும் புகழ்ந்து பாராட்டப்படுகின்றன. அந்நூல்களே "நவில்தொறும் நூனயம்போலும்" என்னும் வாக்கிற்கிலக்கியமாய்ப்பலமுறையாராயப்புகினும் ஒவ்வொருமுறையினும் புதியபுதிய விஷயங்களை அறிதற்கிடனாயுள்ளன. இவ்வாறாய சிறந்த மொழிகளுள் நம் தமிழ்மொழியும் ஒன்றே. இம்மொழிக்குரியருள் எண்ணில் பல சான்றோர்கள் அவ்வப்போதவதரித்துச் சிறிய பெரிய நூல்கள் பல இயற்றி நம் தமிழ்மொழியை வளப்படுத்தியுள்ளார். அந்நூல்களுட் சிலவற்றையேனும் பலகால் நுணுகியறியப்புகுங் கருமத்தை மேற்கோடற்கு நம் ஆயுட்பிரமாணம் பற்றாததாகும். ஆயினும் அச்சான்றோர்களது நூற்பொருள் ஆராய்ச்சியில் மனத்திற்குண்டாம் இன்பம்போல் இவ்வுலகில் வேறெக்கருமத்தினும் உண்டாவதில்லையென்பது கற்றோர்களது அநுபவசித்தமே. இவ்வகையாய நூலா

ராய்ச்சியையும் ஓர் விஷயமாகத் தம்முட்கொண்டு நம் "செந்தமிழ்" விளங்கவேண்டுமெனவும் அவ்விஷயதானஞ் செய்பவருள் யானும் ஒருவனுயிருத்தல்வேண்டுமெனவும் சில வித்துவான்களும் எனது நண்பருட்சிலரும் விரும்பியதனல் மிக்க கல்விமான்களால் இயற்றற்குரிய இவ்வரும்பெருஞ்செயற்குச் சிற்றறிவினனுயை யான் அவராணையை மறுத்தற்கஞ்சி ஒருப்பட்டேன்.

சான்றோர் நூல்களுள் செம்பொருளேயன்றிக் குறிப்பிற்றரு பொருள் மிகுதியும் உள்ளன. அவை நுணுகியறிவார்க்கே புலப்படற்குரியன. இத்துணைச் சிறப்புவாய்ந்த நூல் பல நம் தமிழ் மொழியிடத்து உளவேனும் யான் இதுபோது "கம்பராமாயணம்" என்னும் நூலாராய்ச்சியை விஷயமாகக்கொண்டு என் சிற்றறிவிற்கெட்டிய துணையும் நம் "செந்தமிழ்" வாயிலாய் விரிப்பான்றொடங்குகின்றேன்.

சுந்தரகாண்டம்; திருவடிதொழுதபடலம்.

(58-வது செய்யுள்.)

கண்டனன்கற்பினுக்கணியைக்கண்களால்
தெண்டிரையலைகடலிலங்கைத்தென்னகர்
அண்டர்நாயகவினித்துறத்தியையமும்
பண்டுளதுயருமென் றனுமன்பன்னுவான்.

இச்செய்யுள் அநுமன் சிதையைக்கண்டு பின்னர் ஸ்ரீராமரிடம் வந்து அவர் திருவடிதொழுது பிராட்டியின் விருத்தாந்தம் கூறுவது.—

இதில் கண்டனன் எனப்பயனில்லை முன்னர்க்கூறியது என்னையோவெனின்? ஸ்ரீராமன் சிதையைத்தேடிக்கண்டுவருதற்கு அநுமனுக்கு ஆணை தந்தவராதலின் அநுமன் காண்டற்குரிய பொருள் சிதையென்பது ஸ்ரீராமனுக்குத்துணிந்தபொருளேயாம். அநுமன் கண்டனனே வில்லையோ என்பதே ஐயப். ஐயத்தை நீக்கலே வாக்கியம் எழுவதன் முக்கியப் பயனுதலின், கண்டனன் என்னும் ஐயத்

தை நீக்குஞ்சொல்லை இங்ஙனம் முன்னர்ப்புணர்த்திக்கூறினர் என க்கோடல் ஒன்று. அன்றியும், சீதையைக்கண்டனன் எனக்கூறின் சீதையென்ற சொல்லைக்கேட்ட துணையானே பயனில கண்டதாக வோ காணாததாகவோ எவ்வாறு முடியுமோ என்று ஐயத்தை விளை த்துப் பயனில முடியுந்துணையும் ஸ்ரீராமனே அவாவியவுள்ளத்தன க்குமாதலின் அத்துணைச் சிறுபோதும் அங்நிகழ்ச்சியுறுவண்ணம் துணிபொருளைக்கூறிக் காலத்தை நீட்டியாது ஐயத்தை விரைவினீ க்கற்பொருட்டு கண்டனன் என்ற சொல்லை முதற்கட்பொருத்திக் கூறினாரெனக்கோடலும் ஒன்று.

இனிச் சீதைக்குரிய இயற்பெயராற்கூறாது கற்பினுக்கணி என ஒரு புனைபெயராற்கூறியது என்னெனில்? கற்பென்ற துணையா னே பெண்ணென்பதும் அவள் தன்மையும் ஒருங்கே அறியக்கிட த்தலானும் கற்பென்ற சொல்லால் குறிக்கப்படும் பெண்பால் சீதை என்பது முன்னரே ஸ்ரீராமனுக்குத் துணியப்பட்டபொருளாதலா னும் சொற்பல்காமை என்னும் நயம்பற்றிக்கூறியதெனலாம். கற் பினைச் சீதை அணியாகக்கொண்டனள் எனக்கூறல் மரபாயிருக்க, கற்புச் சீதையை அணியாகக்கொண்டதெனப்பொருள்பட, "கற்பினு க்கணியை" என்று கூறியது என்னையோவெனின்? சீதை கற்புக் குணம் உடையாள் என்பது ஸ்ரீராமன் நன்கறிந்ததே ஆயினும் அவளைக்கொண்டு சென்றான் அரக்கனாதலின் அவன் ஆக்கிரமித்துக் கற்புக்கழிவுசெய்தனனோ என ஐயுறற்குக்காரணமுண்டாதலின், கற்புச் சீதையாற்போற்றப்பட்டும் பிறர் ஆக்கிரமத்தால் அழிவுபெ றாது உம் வனப்புற்றிருக்கின்றதெனக்குறித்தற்பொருட்டே கற்பு சீதையை அணியாகப்பூண்டு விளங்கியதெனச்சீதையின் கற்பின் எவ் வகை ஐயமும் ஒரு சிறிதும் நிகழாவண்ணம் கூறியதெனக்கொள்க. அன்றியும் கற்பென்பது பொதுவகையால் மகளிர் யாவரும் இன் றியமையாது போற்றற்குரிய குணமாம். அன்பெனுங்குணத்தைத் தம் பதிமாட்டேயன்றி வேறெப்பொருளினும் செல்லற்கிடங்கொ டாது போற்றுதலே கற்பெனத்தகும். கற்புக்குணம்பூண்ட மங் கையர் பல்லோரும் தம் பதிமாட்டே செல்லற்குரிய அன்பைப்பிரி த்துத்தம் பதிமாட்டும், பரமபதியான ஈசன்மாட்டும் செலுத்தலும், அவ்வாறு இருவகைப்பட அன்பு செலுத்தினும் அவரைக்கற்பு

டைமங்கையராகவே உலகங்கொள்ளலும் இயற்கை. ஆயினும் ஒரு திறப்பட்ட அன்பு இருவகைப்பட்ட துணையானே அக்கற்பின் சிறப்புச்சிறிது குன்றியதாகவே கொள்ளலாம். சீதையின் விஷயத்தில் பதியும், பரமபதியும் ஒருவரான ஸ்ரீ ராமபிரானேயாதலால் சீதையின் கற்பில் ஒரு சிறு குறையும் இன்றாகி விளங்குதலின், கற்புக்குச்சீதை அணியாகிக் கற்பின் இயற்கையில் அமைந்த சிறிய குறையையும் மாற்றிக் கற்பை வனப்புறச்செய்தாள் எனக்கோடற்கே கற்பினுக்கணியை எனக்கூறியதெனக்கொள்க.

இனி, கண்டனன் என்ற துணையானே காண்டற்குரியவுறுப்புக் கண் என்பது தெளிவாயிருக்க கண்களால் என மிகுத்துக்கூறியது எதுபற்றியோ எனின்? ஒருபொருளை நிச்சயித்தற்குப் பிரத்தியட்சம், அநுமானம், சாப்தம் எனப் பிரமாணங்கள் மூன்றுள்ளன. இவற்றுள் அநுமான சாப்தப்பிரமாணங்களால் தெளிந்தபொருளையும் பிரத்தியட்சம்போற்கொண்டு வியவகரிப்பது உலகவழக்கில் உண்டு. அதுபோல் சம்பாதி உயர்ந்து பறந்து சீதையை இலங்கையிற்கண்டு சொல்லிய ஆப்தவாக்கியப்பிரமாணத்தோடு அமையாது தானே கடலைத்தாவிச்சென்று சீதையைத்தன்கண்கொண்டு கண்ட பிரத்தியட்சம்பற்றிக் கூறியதென வலியுறுத்தற்கே கண்களால் என அநுமன் சொல்லியதெனக்கோடற்கென்க. அற்றாயின், கண்டனன் என்ற சொல்லை அடுத்தே கண்களால் என்ற கருவிப்பொருளையும் உடன்கூறாது கற்பினுக்கணியை என்ற சொற்குப்பின்னர் கண்களால் எனக்கூறியது என்னையோவெனின்? கற்பென்பது உள்ளத்தினிகழும் ஓர் நெகிழ்ச்சியாய குணமேயன்றிக் காண்டற்குரியபொருள் அன்றாயினும் அசோகவனத்திடை இராவணன் வந்து பிராட்டியாரோடு சம்பாஷித்தகாலத்து வெளிப்பட்ட சீதையின் கற்புத்திறத்தை அநுமன் மரத்தில் மறைந்து நின்று கண்கூடாகக்கண்டானாதலின் சீதையையேயன்றி அவள் கற்புத்திறனையும் தன் கண்ணாற்கண்ட பிரத்தியட்சம்பற்றிக் கூறியதெனக்கோடற்கு, கற்பினுக்கணியென்ற சொற்குப்பின்னர் கண்களால் எனக்கருவிப்பொருளை வைத்ததென்க.

இனி, "தெண்டிரையலைகடல் இலங்கைத்தென்னகர்" என்றதனால் அநுமன் சீதையைக்கண்ட இடங்கூறியவாறாயிற்று. இலங்

கையென்ற இடப்பெயரோடு அந்நகர்நின்ற திசையையும் உணர்த்துவான்தென்னகர் எனக்கூறியதாகக்கொள்ளலுமாம். அன்றியும் சீதையைக்காண்டலே காரணமாக அநுமன் இலங்கை சென்றிருப்பினும் மாற்றான்வயிற்சென்றுழி அவன் வலிமுதலியன ஆய்ந்தறிந்து தம் நாயகற்குணர்த்தல் உத்தமதூதின் கடனாதலால் அம்முறைபற்றி அநுமன் இலங்கையின் தன்மையை நன்காராய்ந்து ஸ்ரீராமனுக்குக்கூறியதாகப் பொருள்கோடற்கும் இடந்தந்துளது. அஃதெங்ஙனம் எனின்? தென்னகர் என்பது அழகுபொருந்திய நகர் எனப்பொருள்படும். இதனால் அழகு முதலியன பொருந்திநிற்றற்கு உரிய புண்ணியம் அமைந்து நின்றதென்பது உய்த்துணரக்கிடந்தது. இதனால் இராவணன் முன்னர்ச்செய்த தவம் முதலிய நற்கருமத்தின் பயனாய் இத்திருவெய்தினனென்பது தெளிவாம். ஆயினும் அலைகடலிலங்கையென இலங்கைக்குக்கொடுத்த அடையால் கடல்சூழ்ந்த இலங்கை எனப்பொருள்பட்டு கடல் கரியநிறத்தைக்குறிக்க கரியநிறம் பாவத்தைக்குறிக்க பாவத்தாற் சூழப்பட்ட இலங்கையெனக்குறிப்பிற்றருபொருளாய்க்கொள்ளற்கு இடந்தந்துள்ளது. இதனால் முன்னர் இலங்கைக்கு அரசனான இராவணன் புண்ணியப்பேறுற்றிருந்தும் பின்னர் அவன் செய்த பாவம் மிகுத்துச் சூழ்ந்துவிட்டமையால் விரைவில்அவன் அழிதற்குரியனென அநுமன் உய்த்துணர்ந்து ஸ்ரீராமனுக்கு அக்கருத்துந்தோன்றக்கூறினான் எனவும் கொள்ளலாம். அன்றியுங் கடல் தாழிடமாதலின் அதனை அடுத்த இலங்கையும் தாழ்வடைந்திருக்கின்றதெனக் குறித்ததாகவுங்கொள்ளலாம். இதுவன்றியும் வானரவீரர்க்குச்சீதையைத் தேடிவரும்படி குறித்தகாலத்து அநுமன் வாராது காலந்தாழ்த்தமைபற்றி ஸ்ரீ ராமன் தன்னை அபராதியாய் மதித்தல் கூடுமாதலின் அவ்வாறெண்ணாதிருக்கக் கடலைக்கடந்து சீதையைக் காணவேண்டியிருந்த தாமேற்கொண்ட செயலின் அருமைதோன்றத் 'தெண்டிரை அலைகடலிலங்கை' எனக்கூறித்தன் அபராதத்தை க்ஷமித்தற்குக் காரணமுளதெனக் கூறினான் என்றலும் ஆம்.

இனி, அண்டர்நாயக என இராமனை ஓர் புனைபெயர்கொண்டு அநுமன் விளித்தவாறென் எனின், கடல்சூழ்ந்த இலங்கை என்றதனால் சத்துரு பக்கல் தாழ்வு குறித்தானாகலின் அதனின் மா

ருய்த் தன் நாயகன்மாட்டுள்ள உயர்வுகுறிப்பான் அண்டர்நாயக எனக்கூறினனுகும். அன்றியும் அண்டர் யாவரும் இராவணன்மாட்டு ஏவற்றொழில் புரியக்கண்ட அநுமன் இராவணனினும் சிறப்புடைமை இராமனிடைக்கண்டானுதலின் அண்டர்நாயகன் என்ற பெயர்புனைந்தான் எனக்கொள்க. அன்றியும் கடல்சூழ்ந்த இலங்கை என்றதனுல் பாவஞ்சூழ்ந்த இலங்கை எனக்கொண்டு அதற்கு இறைவனும் சத்துருவுமான இராவணன் பாவியெனத்துணிந்தான்; அதற்கு மாருய்ப் புண்ணியபூமியில் உறைபவர் அண்டர் ஆதலின் அவர்க்கு நாயகன் என்றதனுல் ஸ்ரீ ராமனைப் புண்ணியமூர்த்தியெனக்கொண்டு விளித்தானென்க. இதனுல் பாவந்தோற்பதும் புண்ணியம் வெல்லுவதும் ஒருதலையாகலின் பாவியாகிய இராவணனுக்குத் தோல்வியும், ஸ்ரீராமனுக்கு வெற்றியும் உளவாதல்குறித்துக் கூறினன் எனக்கோடலும் அமையும். அன்றியும் இராவணன் அண்டர்கட்கு இடுக்கண் செய்வதால் தம் அடியார்க்குறும் இடையூறு நீக்கல ஆண்டான் கடமையாதலின், ஸ்ரீராமன் இராவண ஸம்ஹாரம் செய்வதற்குக் காரணமுண்டெனத் தோற்றுவான் 'அண்டர் நாயக' என விளித்தான் என்பதுமாம்.

இதனையடுத்த இனியென்னும் பதப்பிரயோசனம் யாதோ என்னின்? தான் இதுகாறும் உணர்ந்து கூறிய யாவும் மெய்யுணர்ச்சியேயன்றி ஒரு சிறிதும் பொய்யுணர்வில்லை எனத் தன் துணிபின் வன்மை தோற்றற்கென்க.

இனித் துறத்தி என்றார்: துறத்தல், நீக்கல், ஒழித்தல், தவிர்தல் முதலிய சொற்கள் பிற்காலத்தில் பொருள்வேற்றுமை சிறிதுமற்ற ஒரு பொருள் குறித்த பலவினைத் திரிசொல்லாகக்கொள்ளும் வழக்கு உளவேயன்றி முற்காலத்துச்சான்றோராய நூலாசிரியர் உரையாசிரியர் முதலினோர் இச்சொற்களைச் சிறிது பொருள்வேற்றுமையுடையனவாகவே கொண்டு அவ்வவ்விடத்திற்கேற்ப அவற்றைப் பிரயோகிக்கும் கொள்கையுடையாரென்பது பண்டைநூல் உரையாராய்ச்சியுடையாரது துணிபு. இவ்வாறு பலசொற்களையும் அவ்வவற்றிற்குரிய பொருளாற்றலை நன்குணராது பிரயோகிக்கும் வழக்கை எடுத்து விளக்கப்புகின் மிகவிரியுமாதலால்

இங்குப் பிரயோகிக்கப்பெற்ற துறத்தல் என்னும் சொற்பொருளா ற்றல் ஒன்றே ஆராய்வாம். ஒரு காலத்துத்தான் நீக்கியபொருள் தன்வயின் பிற்காலத்து வந்து அடையவுங்கூடும். அவ்வாறன்றி ஒருகாலத்துத்தாம் நீக்கியது பின்னர் எக்காலத்தும் தம்மை அடையாது விடுதலென்ற பொருள்பற்றியே துறத்தல் என்னும் பதம் பிரயோகிக்கப்படுவது. இதனை ஒருகாலத்து இல்லறவின்பத்துப் பொருந்திநின்று பின்னரவ்வின்பம் ஒருசிறிதும் தம்மை வந்து அடையாது அறவே ஒழித்தவரைத் துறந்தார் எனக்கூறும் வழக்குப்பற்றியுணர்க. இதனால் இங்குத் "துறத்தி ஐயமும்பண்டுளதுயரும்" என்ற இடத்தும் ஐயமுந் துயரும் இனி எக்காலத்தும் ஒருசிறிதும் ஸ்ரீ ராமனை வந்தடையாவென்னுந்துணிபுபற்றி அப்பொருட்குரிய "துறத்தி" என்னுஞ்சொல்லாற் கூறியதென்க.

இனி, ஐயமும் என்று பல்வகை ஐயங்களையும் உளப்படுத்தற்கு ஜாதி ஒருமையாற்கூறினர். பல்வகை ஐயமாவன:—சீதையிருக்குமிடம், அவள் கற்பின் நிலை, மாற்றான்வலி, தன்வலி, போரில் வெற்றி முதலியன. இவையாவும் தாம் நன்காராய்ந்த துணிபுரை முன்னர்க்கூறினராதலால் அதுபற்றிய ஐயம் ஸ்ரீராமனுக்கு இனி நிகழன்முறையன்றென்பான் இனித்துறத்தி ஐயமும் என்றார்.

இனி, பண்டுளதுயரும் என்றது எற்றுக்கெனின், ஐயம் பல்வகையாயவாறுபோல் துயரும் பல்வகைக் காரணம்பற்றி எழுந்தனவாகும். துயரெனக்கூறியமையாது பண்டுளதுயர் என்றதனால் சீதையின் பிரிவால் உண்டாய துயர் நீங்குங்காலம் கிட்டியதனால் துயரைப் பண்டுளதெனக் கொண்டாரென்க. அன்றியும் ஸ்ரீ ராமனுக்குச் சீதையின் பிரிவு நீண்டகாலம் உண்டாயதெனக்காலத்தின் நீடிய தன்மை குறிப்பான் பண்டெனக்கூறியதுமாம். அல்லதூஉம் ஸ்ரீராமன் நாடுவிட்டுக் காடடைந்ததனால் தாயர் தம்பியர் முதலியோரை விட்டு நீங்கிய துன்பமும் இராவணவதம் விரைவில் முடிந்து நாடடையத் திருமாதலின் அத்துயரும் நீக்கற்குரிய என்றற்குப் பண்டுளதுயரும் துறத்தியென்றதென்க. மற்றும் பாற்கடலில் தேவர்கட்கும் தண்டகவனத்தின் முனிவர்களுக்கும் கண்டக

ஞன இராவணனை வதைத்து அவர்கட்கு இன்பம் நல்குவதாக வாக்களித்தபடி அது நிறைவேறாது தாங்கூறிய துஷ்டநிக்ரகஞ்செய்து சிஷ்டபரிபாலனம் செய்யக் காலந்தாழ்த்தமையான் ஸ்ரீராமனுக்குண்டாய துயரும் குறித்தற்குப் பண்டுளதுயரும் எனக் கூறியதெனினும் பொருந்தும்.

இனி, "அநுமன் பன்னுவான்" என முடித்தமையின் இச்செய்யுள் அநுமனது கூற்றெனவுணர்க. இதில் பயனிலையை இறந்தகாலத்தாற்கூறன் மரபாயிருக்கப்பன்னுவான் என எதிர்காலத்தாற்கூறியது என்னையோ எனின், தாம் கருதிய விஷயங்களைத்தொகுத்து இச்செய்யுளிற் கூறியதேயன்றிப் பின்னரும் சில செய்யுட்களால் வகுத்துரைப்பான்புகுகின்றாராதலின் என்க.

(இன்னும் வரும்.)

போ. பாண்டித்துரை.

தொல்காப்பியப்பரீக்ஷை.

க. வினை வினையெச்சம் வினைமுத லானும்
ஆன்வந் தியையும் பிறவினை யானும்
தாமியன் மருங்கின் முடியு மென்ப. (வினை-கூகூ.)

(இ-ள்) செய்து, செய்யூ, செய்பு என்னும்வாய்பாடுகள் மூன்றுமல்லாத மற்றைய வாய்பாட்டு வினையெச்சங்கள் வினைமுதலுக்குரிய வினைகொண்டும், அங்கே வந்துபொருந்தும் பிற வினைமுதலுக்குரிய வினைகொண்டும் (வரையறையின்றித்) தாமியலுமாற்றான்முடியும் என்று கூறுவர் ஆசிரியர் எ-று.

"செய்தென, செய்யியர்" முதலிய வாய்பாட்டு வினையெச்சங்களாகிய எனை வினையெச்சம், தன்கருத்தாவின்வினை, பிறகருத்தாவின்வினை என்னும் இருவகை வினையுங்கொண்டு முடியும் என்பது இதன் தாற்பரியம்.

வினை என்பது முன்னர்ச்சுட்டப்பட்டதனைத் தவிர்த்து அதன் இனத்தைக்கருதி நிற்பதோரிடைச்சொல். "முதனிலை மூன்றும்" என்பதனாற் கொள்ளப்பட்ட "செய்து, செய்யூ, செய்பு" என்னும் வாய்பாடுகள் மூன்றுமே முன்னர்ச்சுட்டப்பட்டது எனக்கொள்க. வினைமுதல் - முடிக்கும் வினையின் கர்த்தா. இது தன்கர்த்தா எனவுங் கூறப்படும்.

"ஆன்வந்தியையும்" என்புழி "ஆன்" என்பது அவ்விடம் என்னும் பொருளை உணர்த்தும். இது "ஆன்வழிக்கொள்ளும்வேத னவன்றனைப் பற்றி வல்லே—மீன்வருகென்ன" (வீராட்ட) என்னுந் தணிகைப்புராணத்தினாலுந் துணியப்படும். சிவஞானபோதத்திலே எட்டாஞ்சூத்திரத்திலே "பசித்துண்டு" என்னும் வெண்பாவிலே "தவத்தான் மருவு" என்புழி "ஆன்" என்பதற்குச் சிவஞானசுவாமிகளும் "அவ்விடம்" என்று பொருள்கூறி "ஆன்வந்தியையும்" என்னும் இச்சூத்திரபாகத்தையும் எடுத்துக்காட்டினர். இலக்கணவிளக்கத்திலும் இச்சொற்கு இப்பொருள் கூறப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு கூறப்பட்ட "ஆன்" என்பது அச்சிடப்பட்ட தொல்காப்பியவுரைகளிலும், நேமிநாதவுரையிலும் ஆன என னகார வுயிர்மெய்யீறாகி வேறுபட்டுப் போயிற்று. அவ்வுரைகளிலே "ஆன வந்து" என்றிருத்தலை நோக்குக. "ஆண்டுவந்து" என்னும் அதனுரையையும் நோக்குக. இவ்வுரைக்கு "ஆன" என்னும் அச்சொல்லின்கண் ஆற்றல் இல்லை.

"பிறவினையானும்" என்புழிப் "பிறவினை" என்பது பிறகருத்தாவின்வினை எனப்பொருள்படும், பிறகருத்தாவைப் பிறவினைமுதல் எனவுங் கூறுவர் "பிறவினையானும்" என்னும் பாடம் மேலே கூறப்பட்ட தொல்காப்பிய நேமிநாத வுரைகளிலும், சிவஞானபோதமாபாடியத்திலும் "வினைநிலையானும்" என்று வேறுபட்டுப் போயிற்று. "வினைநிலையானும்" என்பதற்கு நச்சினார்க்கினியத்திலுஞ் சேனாவரையத்திலுங் காணப்படும் உரை "பிறவினையானும்" என்பது. இவ்வுரைக்கு "வினைநிலையானும்" என்பது இயையுமாறு எங்ஙனம்! இதற்கேற்ற ஆற்றலையுங்காணோம்! ஆதலின் "பிறவினையானும்" என்னும் பாடமே பெரிதும் பொருந்துமாறுடையது. இப்பாடம் அச்சிடாப்பிரதி ஒன்றில் இருந்தது. அதுநிற்க. அப்பாற் செல்லுதும்.

உ. அளபெடை மிகூஉ மிகர விறுபெயர்
இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப. (விளி-அ.)

(இ-ள்.) அளபெடை தன்னியல்பின் மிக்குமாத்திரைபெற்று நிற்கும் இகரவீற்றுப்பெயர் இயற்கையவாய் விளிகொள்ளுஞ் செயற்கையையுடைய என்று கூறுவர் ஆசிரியர் எ-று.

உரைகாரர் தன்னியல்பின் மிக்கொலிக்குங்கால் நான்குமாத்திரையும் ஐந்துமாத்திரையும் பெறும் என்பதும், இகரம் ஈகாரமாகாமையின்; இயற்கையவாகும் என்றும், மாத்திரை மிகுதலாகியசெயற்கையுடைமையாற் செயற்கைஎன்றுங் கூறினர் என்பதுங் கூறுவர்.

இதன் உதாரணத்தையும் பரிக்ஷிப்பாம். "தொழிலீ இஇஇ" என்பதே இதற்கு உதாரணமாகும். இவ்வுதாரணம் கலித்தொகையிலே முல்லைக்கலியிலே மூன்றுவதிலே அடியின் முதலிலே நின்ற கூன் என்னுந் தனிச்சொல். இதற்கு நச்சினர்க்கினியர் "காண்டற்றொழிலையுடையவளே" என்று பொருள்கூறி "இஃது அளபெடை மிகூஉ மிகரவிறுபெயர்" என்று இச்சூத்திரத்தையும் எடுத்துக்காட்டினர். "இது தொழில் செய்கின்றவளே! என்னும் பொருடந்து நிற்பதோர்சொல்" என்று தொல்காப்பிய வுரையிலுங் கூறினர்.

இங்ஙனங் கூறப்பட்ட பொருட்கு மூலமாய்நின்ற "தொழிலீ இஇஇ" என்னும் இப்பாடம் அச்சிடப்பட்ட தொல்காப்பியவுரைகளிலே "தோழீ இஇஇ" என்று வேறுபட்டுப்போயிற்று. "தோழீ இஇஇ" என்னும் பாடத்திலே நச்சினர்க்கினியர் கூறிய பொருளுக்கேற்ற ஆற்றல் ஒருசிறிதும் இல்லை.

ஆதலின் "தொழிலீ இஇஇ" என்னும் பாடமே கொள்ளற்பாலது என்று கொள்ளுதும், அன்றிக் கலித்தொகையச்சிலும் அளபெடையின் அறிகுறியாகிய இகரங்கள் இரண்டு வழுவிற்றென்று கொள்ளுதும். இக்குமங்குஞ் சேரநோக்கி இன்னும் பரிக்ஷித்து நிலைபெறுத்துதல் கலைத்துறையின் முறைசென்ற அறிஞர் கடன்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

The Luminaries of the Sky.

சோதிமண்டலங்கள்.

ஆகாயம் நிர்மலமாயிருக்குமொருநாளிரவில் வானத்தையுற்று நோக்கின் அதன்கண் பலவகைநக்ஷத்திரங்களகப்படுகின்றன. அவை உருவத்திலும் ஒளியிலும் வேற்றுமையுற்று விளங்குகின்றன. சோதிடநூன்முறை யறியாதார் அவையனைத்தும் நக்ஷத்திரங்களே யெனப் பொதுப்படக் கூறுவரெனினும், உண்மையிலவை 1. ஸ்திர நக்ஷத்திரங்கள், 2. கிரஹங்கள், 3. உபகிரஹங்கள், 4. உற்கைகள், 5. தூமகேது என ஐவகைப்படுவனவாம். ஸ்திரநக்ஷத்திரமென்பது ஒரேநிலையில் மினுக்கு மினுக்கெனப்பிரகாசிக்கும் தன்மையது. கிரஹமென்பது மேற்கூறிய நக்ஷத்திரங்களினிடையே மேற்றிசையினின்று கீழ்த்திசையை நோக்கியாதேனுமொரு ஸ்திரநக்ஷத்திரத்தைச் சுற்றிச் சஞ்சரித்துக்கொண்டிருப்பதாம். உபக்ரஹமென்பது ஒருகிரஹத்தைச்சுற்றிச் சஞ்சரிப்பதேயல்லாது அந்தக்கிரஹம் செல்லுமிடத்திற்கெல்லாம் தானும் கூடவேசெல்லுவது. வால்போன்ற சோதிவாய்ந்து எரிந்துகொண்டு ஆகாயத்தினின்றுதிரும் நக்ஷத்திரத்திற்கு உற்கை (எரிகொள்ளி) என்றுபெயராம். தூமகேதுவெனப்படுவது ஏறக்குறைய பெரியவாலுடன்கூடி ஒரோர்காலத்தில்மாத்திரம் ஆகாயத்தில் தோன்றிமறையும்.

இத்தகைய சோதிமண்டலங்கள் எவ்விதமான ஆதாரத்தினால் ஆகாயத்திற்பரந்து நிற்கின்றன? அவையொன்றுக்கொன்று அமையப்பெற்றுள்ள அந்நியோந்நியாகர்ஷணசக்தி (Universal gravitation) யினால் தாங்கப்பெற்றுத் தத்தம் மார்க்கங்களில் தவறாது ஸஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன. இந்தச்சக்தியின் விசேஷத்தினாலேயே நக்ஷத்திரங்கள் தம்மைத்தாமே சுற்றிக்கொள்ளவும் (பிரமணம் செய்யவும், rotation), ஏனைய நக்ஷத்திரங்களைச் சுற்றிவரவும் (பரிவர்த்தனம் செய்யவும், revolution) கூடியவைகளாயிருக்கின்றன.

மேற்கூறிய ஸ்திர நக்ஷத்திரங்களுள் நமது சூரியனுமொன்றாகும். ஏனையஸ்திரநக்ஷத்திரங்களுள் சூரியனுக்குள்ள பரிமாணமமை

ந்தவை பல; அதனினுமதிக பரிமாணமுற்றவை சில—எனினும் அவையனைத்தும் வெகு தூரத்திலிருக்கின்றமையின் சிற்றுருவம் வாய்ந்தவைகளாய்த் தோற்றுகின்றன. பூமிக்குமிக்க அருகிலுள்ள நக்ஷத்திரம் மிருகவியாதன் (Sirius or Dogstar) எனப்படும். ஒளி (தேஜஸ்) யானது ஒரு விகலை (Second) யில் ஏறக்குறைய இரண்டு லக்ஷம்மைல்தூரம் யாத்திரைசெய்யும் (வியாபிக்கும்) தன்மையது. மிருகவியாதனது ஒளி பூமிக்குவந்துசேருவதற்கு மூன்றரை வருஷமாகின்றதெனின், பூமிக்கும், அந்த நக்ஷத்திரத்திற்குமுள்ள தூரமெவ்வளவென்பதை இதனையோதுவோரே கணக்கிட்டுக்கொள்வாராக. மிருகவியாதனென்னும் நக்ஷத்திரமானது சூரியமண்டலத்தைவிட ஐம்பத்திரண்டரைமடங்கு பெரியதாகும்; ஆனபோதிலும் அது வெகுதூரத்திலிருப்பதனால் நமதுகண்ணுக்கு அஃதொரு பிரதமவர்க்க நக்ஷத்திரமாய் (Star of the first magnitude) க்காணப்படுகின்றது. சூரியன், அதனைச்சுற்றிவரும் கிரஹங்கள், அந்தக்கிரஹங்களையடுத்து ஸஞ்சரிக்கும் உபக்ரஹங்கள், அதனைச்சேர்ந்த உற்கைகள், தூமகேதுக்கள் ஆகிய இவையனைத்தும் சேர்ந்து ஸௌரகணம் (Solar system) எனப்பெயர்பெறும்.

ஸ்திரநக்ஷத்திரங்களுட்சில தனித்தும், சில ஒன்றுகூடியுமமைந்திருக்கின்றன. திரளாயொன்றுகூடிய ஸ்திரநக்ஷத்திரங்களுக்குத் தாராகணம் (Constellation) என்று பெயராம். இரவில் நாம் வடபுறம்நோக்கி நின்றுகொண்டு நிர்மலமான ஆகாயத்தையுற்றுப்பார்க்கின் மேற்றிசையினின்று கீழ்த்திசையாய் இருபத்தேழு தாராகணங்களமைந்திருப்பதைக் காணலாம். இவையே அசுவதிமுதலியனவாகும்.

கணிதசாஸ்திரத்தின்படி ஆகாயவலயமானது 360° பாகமாகவும், ஒவ்வொருபாகமும் 60'-கலைகளாகவும், ஒவ்வொருகலையும் 60'' விகலைகளாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதே ஆகாசவலயமானது மேற்கூறிய இருபத்தேழு தாராகணங்களாகவும் பிரிக்கப்பட்டுளது. இதுவன்றி, இரண்டேகால் நக்ஷத்திரமடங்கியதும் மேஷம் முதலிய பெயர்பெற்றவையுமான பன்னிரு ராசிகளாகவும் அவ் ஆகாயவலயம் பிரிக்கப்பட்டுளது. இதுவே ராசிச்சக்கரமெனப்பெயர் பெறும்.

ரேவதிநக்ஷத்திரத்தினிறுதியும் அசுவதி நக்ஷத்திரத்தின் துவக்கமுமாகுமிடத்தினின்று மேஷராசி கணிக்கப்படுகின்றது. இவ்விடத்திற் குறிகுறியாய் நின்றதொரு ஸ்திரநக்ஷத்திரம் இப்போது நமக்குக் காணுமற் போனமையின் மேஷராசியின் ஆதியை நிச்சயமாய்ச்சொல்ல முடியாதாயிற்று. ஆகவே, மீனராசியைக் காட்டும் தாராகணத்திலுள்ள ஜேடாபிஸ்ஸியம் (Zeta Piscium) என்னும் நக்ஷத்திரத்தை ஸ்தூலக்குறியாய்வைத்துக்கொண்டு இப்பொழுது கணக்கிட்டுவருகின்றனர். இந்தக்காரணத்தைக்கொண்டே "மீனமேஷம் பார்க்கிறுன்" என்னும் பழமொழி வழங்கப்பெற்றது; அஃதாவது, 'கண்டிதமாய் (நிச்சயமாய்) ச்சொல்லமாட்டாமல் விழிக்கிறுன்' என்பதாம்.

நமது ஸௌரகணத்தில் (Solar system) சேர்ந்த கிரஹங்கள் தம்மைத்தாமே சுற்றிப்பிரமணம் செய்வதன்றி (rotate), சூரியனைச் சுற்றி மேற்றிசையினின்று கீழ்த்திசையாய்ப் பரிவர்த்தனம் செய்கின்றன. (Revolve round the Sun) இப்படிப் பரிவர்த்தனம்செய்வது மேஷாதி பன்னிருராசிகளின் வழியேயாம். அவை பரிவர்த்தனம் செய்யும் கிரமமோவெனின்,—1. புதன் (Mercury), 2. வெள்ளி (Venus), 3. பூமி (Earth), 4. செவ்வாய் (Mars), 5. வியாழன் (Jupiter), 6. சனி (Saturn) 7. விமந்தன் (Uranus), 8 பிரமந்தன் (Neptune)—என்னும் வரிசையில் முறையே சுற்றிவருகின்றன. இவையல்லாது இன்னுமநேககிரஹங்களைச் சோதிடசாஸ்திரிகள் நூற்றுக்கணக்காய்க் கண்டுபிடித்திருக்கிறுர்கள். அவை இவ்வளவு முக்கியமானவையல்ல. சூரியனைச்சுற்றிவரும் எட்டுமுக்கியமான கிரஹங்களுள் பூமிக்கும் சூரியனுக்குமிடையே சுற்றிவருவன புதனும் வெள்ளியுமாம்; இவை *நீசக்கிரஹங்கள் (Inferior or Interior Planets) எனப்படும். பூமிக்குப்புறம்பாய்ச் சுற்றிவருவன செவ்வாய், வியாழன், மந்தன், விமந்தன், பிரமந்தன் என்னும் ஐந்துகிரஹங்களாம்; இவை உச்சக்கிரஹங்கள் (Superior or Exterior Planets) எனப்படும். பூமியிலிருந்து பார்க்கிறவனுக்கு நீசக்கிரஹங்களெனப்படுபவை சந்திரனைப்போல வளர்பிறையும் தேய்பிறையும் (கலாவிருத்தியும் க்ஷயமும், Phases) உள்ளவையெனத்தோற்றும். மேற்கூறிய எட்டுக்கிரஹங்களுள் எந்தக்கிரஹத்தினின்று பார்க்கின்றுேமோ

---

* இங்கு நீசக்கிரகங்கள் என்பதற்குக் கீழிடத்துள்ள கிரகங்களென்றும் உச்சக்கிரகங்கள் என்பதற்கு மேலிடத்துள்ள கிரகங்கள் என்றும் பொருள் கொள்ள வேண்டும். பூமியிலிருந்து சூரியனை நோக்குமிடம் கீழ் எனவும் அதன் மறுதலை மேல் எனவும் கொள்வது கெணிதநூல்வழக்கு.

அந்தக்கிரஹத்தையொட்டியமையும் நீசக்கிரஹங்கள் கலாவிருத்தியும் க்ஷயமும் உள்ளனவாய்த்தோற்றும். சோதிடசாஸ்திரத்தின்பலாத்தியாயத்திற் சொல்லப்பட்டவை ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது என்னும் ஒன்பது கிரஹங்களாம். இவற்றுள் பூமிக்கு உபக்கிரஹமாகிய சந்திரனையும், சாயாகிரஹங்களாகிய ராகு கேதுக்களையும் நீக்கி, கிரஹமாகிய பூமியையும், விமந்தனையும், பிரமந்தனையும் சேர்த்துக்கொள்ளின்,—சூரியனும் அதனைச்சுற்றிவரும் எட்டு முக்கியமான கிரஹங்களும் அமையும். இவையே கணிதாத்தியாயத்தின்படி ஏற்பட்ட நவகிரஹங்களாம். பூமிக்கும் செவ்வாய்க்கும் இடையே முன்னர் ஒருகால் ஒரு கிரஹமிருந்தது. பூகம்பத்தினால் பூமியிற் சிலபாகங்கள் உடைந்து போவதுபோல, ஒரு சமயத்தில் உத்பாதம் நேரிட்டு அந்த (இடை)க் கிரஹம் முற்றிலும் உடைந்து கிரஹத்துண்டுகளாயிற்று. (சகலங்களாயிற்று, Asteroids) இந்தத்துண்டுகளும் சூரியனைச்சுற்றிவருகின்றன.

மேற்குறித்த முக்கியமான கிரஹங்களுளொன்றாகிய நம் பூமியின் வடிவம் கிச்சிலிப்பழம்போன்று இரண்டுகோடிகளிலும் தட்டையாயுள்ளதோருருண்டையாம். இஃது உபயநிம்னகோளம் (Oblate Spheroid) எனப்பெயர்பெறும். பூகர்ப்பத்தினூடே சென்று மேற்கூறிய தட்டையான ஸ்தலங்களிரண்டிலும் பூதலத்தைச் சந்திப்பது ஓர் அநுமானரேகை (Imaginary line) ஆகும்; இருபத்துநான்குமணிக்கொருமுறை ஏற்படுகிற பூமியின் சுழற்சியால் பகலிரவெனும் பேதங்கள் அமைவதற்கு நிதானமாய் (காரணமாய்) நிற்பது இந்த அநுமான ரேகையேயாம். இவ்வநுமான ரேகையே அக்ஷரேகை (Axis) எனப்படும். இந்த ரேகையின் இருகோடிகளும் முறையே உத்தரத்துருவம் (North Pole) தக்ஷிணத்துருவம் (South Pole) எனப்படும். உத்தரத்துருவத்திற்கு மேலேநிற்கும் ஸ்திரநக்ஷத்திரமே துருவநக்ஷத்திரமாகும். அதனையடுத்துச் சுற்றிவரும் ஏழுநக்ஷத்திரங்களடங்கிய தாராகணமே ஸப்தரிஷிமண்டலம் (The Great Bear, Ursa Major, Charles' Wagon) எனப்படும். இந்த ஸப்தரிஷிமண்டலத்தில் அருந்ததி எனும்பெயர் வாய்ந்து, யந்திரஸகாயமில்லாத வெறுங்கண்ணுக்குப் புலப்படாதி

ருக்கிற நக்ஷத்திரமொன்றுளது; இந்த அருந்ததியையடுத்து நிற்கும் யுக்மநக்ஷத்திரம் (Double Star) வஸிஷ்டர் எனப்படும். இரு துருவங்களுக்கும் ஸமாந்தரமாய்ப் (Middle) பூமண்டலத்தைச்சுற்றி அரைஞாண் கட்டியதுபோல வரையப்படும் அநுமானரேகை நிரக்ஷ ரேகை (Equator) எனப்படும்.

பூமியானது 365¼ நாளில் ஒருமுறை சூரியனைச்சுற்றி வருகின்றது. இதனாலேயே இரண்டு அயனங்கள், ஆறுருதுக்கள் அல்லது பன்னிரண்டு மாதங்களடங்கிய வருஷம் ஏற்படுகின்றது. இங்ஙனம் பரிவர்த்தனம் செய்வதில் (Revolving), பூமியின் அக்ஷரேகையானது (Axis) தனது சலனதலத்திற்கு (to the plane of the motion) லம்பரேகையைப்போல் (perpendicular) நில்லாமல் 23½ பாகம் சாய்ந்து நிற்பதனால், ருதுக்களின் சீதோஷ்ணபேதங்களும் பகலிரவு (அஹோராத்திர) பரிமாணங்களின் பேதங்களும் அமைகின்றன. இந்தக்காரணத்தினாலேயே, நிரக்ஷரேகையும் (Equator) சூரியகதி ரேகையும் (Ecliptic) ஒன்றாகாமல் இரண்டு தனிவலயங்களாகி, 23½ பாகம் பரிமாணமுள்ள கோணத்துடன், இரண்டு எதிர்த்த பிந்துக்களில் ஒன்றையொன்று வெட்டிநிற்கும். இவ்விரண்டு பிந்துக்களும் விஷுக்கள் (Equinoxes) எனப்படும். இந்த பிந்துக்களுக்கு மேலாக சூரியன் வருங்காலத்தில் பூமண்டலத்தின் அநேக பாகங்களில் பன்னிரண்டுமணி பகலும் பன்னிரண்டுமணி இரவுமாயிருக்கும். இப்படியிருக்கும் தினங்களுக்கே "ஸமாஹோராத்ரதினங்கள்" என்று பெயராம்.

சூரியகதிவலயமானது, மேற்கண்டவாறு வெட்டியபின், மூலைச்சாய்வாக (தெற்கு-வடக்காய்)ச் சென்று, நிரக்ஷரேகையினின்று முறையே தெற்கிலும் வடக்கிலும் 23½ பாகம் வரையிற்சென்று திரும்பிவிடும். அவ்விரண்டு ஸ்தானங்களும் அயனங்களெனப்படும். இங்ஙனமாக, பூபரிவர்த்தனத்தில் (அல்லது, சூரியகதியில்) நான்கு முக்கியமான ஸ்தானங்களும், அந்த ஸ்தானங்களேற்படுகிற நான்கு முக்கியமான தினங்களும் அமைகின்றன. அவையாவன:—

1. சைத்ரவிஷு, Vernal Equinox, ஏறக்குறைய மார்ச்சு மாதம் 21-ஆந்தேதி அமைவது.

2. கடகாயனம், Summer Solstice, ஏறக்குறைய ஜூன் மாதம் 21-ஆந்தேதி அமைவது.

3. துலாவிஷு, Autumnal Equinox, ஏறக்குறைய செப்டம்பர் மாதம் 22-ஆந்தேதி அமைவது.

4. மகராயனம், Winter Solstice, ஏறக்குறைய டிசம்பர் மாதம் 21-ஆந்தேதி அமைவது.

ஒவ்வொரு வருஷத்துப் பஞ்சாங்கத்திலும் பங்குனி, ஆனி, புரட்டாசி, மார்கழி ஆகிய இம்மாதங்களில் எட்டாந்தேதிவாக்கில், முறையே மேஷாயனம், கடகாயனம், துலாயனம், மகராயனம் எனக்குறித்திருப்பதைக் காணலாம். ஆயினும், அநுஷ்டானத்திலோ, அந்த விசேஷ ஸம்பவங்களை மேற்கூறிய தினங்களிற் கொண்டாடாமல், முறையே சித்திரை, ஆடி, ஐப்பசி, தை ஆகிய இம்மாதங்களின் முதல் தேதிகளிற் கொண்டாடுகின்றோம். இதன் காரணத்தை எட்டியமட்டில் விவரிப்போம்.

நிரக்ஷரேகையும் சூரியகதிரேகையாகிய காந்திவலயமும் ஒன்றையொன்று இரண்டுபிந்துக்களில் வெட்டுகின்றன என்றோம். அவ்விரண்டு பிந்துக்களும் வஸந்தவிஷு (Vernal Equinox), சரத்விஷு (Autumnal Equinox) என்பவைகளாம். இவ்விரண்டனுள் வஸந்தவிஷுவே உண்மையான மேஷாதி (First point of Aries) ஆகும். இதில் சூரியன்பிரவேசிக்கும் ஸமயமே மேஷாயனகாலம் எனப்படும். இந்தமேஷாதியானது எப்பொழுதும் ஒரேநிலையிலிராமல் வருஷமொன்றுக்கு நான்குவிகலைபரிமாணமுள்ள தேசம் பின்னோக்கிச்செல்கின்றது. இதுவே விஷுஅபஸரணம் (Precession of the Equinoxes) எனப்படுவது. முன்னரொரு சமயத்தில் மேஷாதியானது ரேவதியினிறுதியில் (அஃதாவது, அசுவினியின் ஆதியில்) இருந்து, மேற்கூறியவாறு வருஷந்தோறும் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பின்சென்று, இப்போது ஏறக்குறைய இருபத்துமூன்று பாகம் பிந்தியது.

ரேவதியின் அந்தத்திற்கும் உண்மையான மேஷாதிக்குமுள்ள இடையே (அந்தராளமே) அயனும்சம் எனப்படுவது. ரேவதியின் முடிவுக்கு அறிகுறியாய் நின்றநக்ஷத்திரம் காணமற்போனமையின், அயனும்ச பரிமாணத்தை நிச்சயமாய் அமைத்துக்கொள்வது இயலாதாயிற்று. ஆதலின் சோதிடப்புலவர்கள் சிறிது வேற்றுமையுள்ள வெவ்வேறு அயனும்சங்களைத் தத்தம் கணிதங்களில் உபயோகித்து வருகின்றனர். பயன்புகலும் சோதிடநூற்பாகத்தின்படி (பலசாஸ்திரத்தின்படி) சரியான காலத்தில் அநுபவமேற்படாதிருப்பதற்கு இஃதொரு முக்கியமான காரணமாகும். சுத்த அயனும்சம் நிலையாமற் போனமையினாலும், உண்மையான மேஷாதியானது பின்னோக்கிச் சென்றுகொண்டிருப்பதைச் சரியாய்க்கணித்தறிந்துகொள்வது ஜ்யோதிஷஸூக்ஷ்மதர்சிகளுக்கே ஸாத்தியமாதலானும், பாமரர்க்கும் புலப்படுமாறு அசுவினியின் ஆதியையே நிலையான மேஷாதியாக்கொண்டு சைத்ரவிஷு முதலிய ஸங்கிரமணகாலங்களையும், திதி நக்ஷத்திராதிகளையும், அதனையொட்டிவரும் பல (பயன்) சாஸ்திரத்தையும் சோதிடசாஸ்திரிகள் அமைத்துவிட்டனர். இத்தகைய கணிதம் ஸாயனஸ்புடம் எனப்படும். ஆங்கிலேயர் முதலிய விதேசி சோதிடபண்டிதர்கள், கிரஹணம் முதலிய கிரஹஸஞ்சாரங்களே முக்கியமெனக்கொண்டு, அயனும்சத்தைக் கவனியாது, உண்மையான மேஷாதியினின்று கணித்து வருகின்றனர். இவ்வகைக்கணிதமானது நிரயனஸ்புடம் எனப்படும். நம் சாஸ்திரத்தின்படியும் கிரஹணநிர்ணயங்கள் நிரயனஸ்புடத்தினாலேயே அமைகின்றன. நமது சோதிடநூல்கள் பெரும்பான்மையும் ஸாயனரீதியாகவே எழுதப்பட்டுள. துருவநாடி முதலிய சில கிரந்தங்கள் நிரயனரீதியாகவே எழுதப்பட்டுள.

ருதுபேதங்கள் ஏற்படுவது உண்மையான மேஷாதியிலிருந்தாகும். உண்மையான மேஷாதியின் காலமோ பங்குனிமாதம் எட்டாந்தேதியாகின்றது. ஆனால், நாம் சைத்ரவிஷு கொண்டாடுவதோ சித்திரைமாதம் முதல்தேதியிலாம். இவ்விரண்டு தேதிகளுக்குமிடையிலுள்ள இருபத்திரண்டுநாள் வித்தியாசத்தை நாம் இப்பொழுது பொருட்படுத்தாவிடினும், இன்னும் வெகுகாலத்திற்குப்பிறகு இந்த

வித்தியாஸம் மிகவதிகமாகும். உண்மையான ருதுக்கள் (இப்பொழுது இருபத்திரண்டுநாள் பின்னடைந்திருக்கின்றன) பலமாதங்கள் பின்னுதைந்துபோம். அப்போது "சைத்ரமும் வைசாகமும் வஸந்தருது" என்பதாதிய ருதுலக்ஷணவாக்கியங்கள் அர்த்தமில்லாதனவாகும். "சைத்ரமும் வைசாகமும் வஸந்தருது" என்று சொல்லவேண்டியதை "சித்திரையும் வைகாசியும் வஸந்தருது" என்றுசொல்வது அறியாமையினுளைமைந்ததாம்.

பஞ்சாங்கத்திலேற்படுகிற மேஷாதிமாஸங்களுக்கும் உண்மையான ருதுக்களுக்கும் வித்தியாசம் வராவண்ணம், சைத்ரவிஷு என்னும் மேஷசங்கிரமணபுண்ணியகாலத்தை நிரயனரீதியாகவே உண்மையான மேஷாயனகாலத்திலமையுமாறு கணிதமுறையைச்சீர் திருத்திக்கொள்வது அவசியமாகும். ஆரியமதசம்பந்தமான கர்மானுஷ்டானங்களுக்கு அவசியமாயுள்ள பஞ்சாங்கத்தைச்சோதித்துச் சீர்திருத்துவது வைதிகாபிமானமுள்ள மகாஜனசமுகத்தாராலாகுமேயன்றி ஏனையோரால் ஆகாது. அவர்களிதனைக் கவனிக்காமையால் நமதுகணிதம் திரிசங்குஸ்வர்க்கத்தில் நிற்கின்றது. விவேகிகளான மகாஜனங்கள் தத்தம் விருப்புவெறுப்புக்களை யொழித்து ஒன்றுகூடி இந்த முக்கியமான சீர்திருத்தத்தைச் செய்துகொள்வது நன்றுமென்பதை இங்குக்குறிப்போம். இதையே எமது விண்ணப்பமாக மகாஜனங்கள் ஏற்பார்களாக.

ஸௌரம், சாந்திரம், ஸௌரசாந்திரம், பார்ஹஸ்பத்யம், கோளம், கிரைஸ்தவம் முதலிய பற்பல பஞ்சாங்கங்களின் ரீதியாக ஏற்பட்டிருக்கும் வருஷங்கள் பலவுள. ராஜஸேமுறையிலேற்பட்ட பஸ்லி முதலிய வருஷங்கள்வேறுள. வகைவகையாக ஏற்பட்டிருக்கும் இத்தனைவருஷங்களுள் ஒன்றிலேனும் மேஷாயனகாலத்திலிருந்து வருஷாதி ஏற்படாதிருப்பது வியஸனிக்கத்தக்கதேயாம்.

சூரியன் மகராசியிற் பிரவேசிப்பதே உண்மையான மகரஸங்கிரமணமாகும். நிரயனரீதியாக வருஷந்தோறும் மார்கழிமாதம் எட்டாந்தேதியன்று மகராசியில் சூரியன் பிரவேசமாகும். அதுகாறுஞ் சூரியன் தெற்குநோக்கிச்சென்று, அன்றையதினத்தில் வடக்குமுகமாய்த் திரும்புவதாகக்காணப்படும். அதுவே தக்ஷிணாயனத்

தின் கடைசி எல்லை (பரமாவதி) யாம். இந்தப்பரமாவதி கிரகூஷ ரேகையினின்று 23½-பாகத்திலிருக்கின்றது. சூரியன் தக்ஷிணாயனத்திலிருந்தபொழுது பூமியின் உத்தரகோளார்த்த வாஸிகளுக்குப் பனிகாலம் ஏற்பட்டிருந்தது. சூரியன்வடக்குமுகமாய்த்திரும்பவே இந்தப்பனி நீங்கியது. பல்வகையான சுபகாரியங்கள், யஜ்ஞம்முதலிய புண்ணிய காரியங்கள் ஆகிய இவைகளைச்செய்வதற்கு உற்றதாகிய உத்தராயணம்தொடங்கியது. இதற்குமுன் சூரியசக்தியினாலேற்பட்டிருந்தமழை, பனி ஆகிய இவைகளினாலுண்டான அநுகூலங்களையநுபவித்ததற்கு நாம் நன்றிசெலுத்தவேண்டியதருணம் இதுவேயாகும். இனி அடுத்துவரும் வஸந்தம், கிரீஷ்மம் முதலிய ருதுக்களில் சூரிய வெப்பமிகுந்து பிறகுமழை ஏராளமாய்ப்பொழியவேண்டுமென நாம் பிரார்த்திக்கத் தக்கதருணமும் இதுவேயாகும். சூரியனது கருணையினால் நமது கைக்குக்கிட்டிய கிருஷிப்பயன்களை (மஹஸூல்) நாம் அநுபவிக்கப் புகுங்காலமும் இதுவேயாம். இவ்வளவு விசேஷமான தருணத்தில் சூரியனை ஆராதித்து, அந்தக்கிருஷிப்பயன்களைச்சர்க்கரைப்பொங்கல் முதலிய சித்திரான்னங்களாகச்செய்து சூரியனுக்கு நிவேதனஞ்செய்து, உற்றாருறவினருடன் கூடியிருந்து விருந்தருந்துங் கொண்டாட்டமே மகரஸங்கிராந்திப்பண்டிகையாம். கிருஷித்தொழிலுக்கு இன்றியமையாததாகிய காளைமாடுகளின் க்ஷேமத்தைக்கருதி, அவைகளின் ஆதிமாதாவாகிய காமதேனுவுக்கும், பால்பொழியும் இக்காமதேனுவையும் மழைபொழியுமேகங்களாகிய காராம்பசுக்களையும் பரிபாலிக்கின்ற இந்திரனுக்கு, மகரஸங்கிரமணத்திற்கு அடுத்த தினமாகிய "மாட்டுப்பொங்கல்" என்னும் கோபூஜாதினத்தில், பூஜைசெய்வது வழக்கமாம். இப்படிப்பூஜைசெய்யுங் காலமானது நிரயனஸ்புடத்தினால் டிசம்பர்மாதம் 22-ஆந்தேதியினின்று ஜனவரிமாதம் 13-ஆந்தேதிக்கு மாறிவிட்டது.

மேஷாதி பன்னிரண்டு ராசிகளில் ஸஞ்சரிக்கும் சூரியநாராயணரே பன்னிரண்டு அபோஸ்தலர்கள் (Apostles) என்னும் சீடர்களுடன் கூடிய கிரிஸ்துவாவர். அவர் தக்ஷிணாயனத்தினின்று திரும்புங் காலமே நாராயணரென்ற கிரிஸ்துவின் ஜனனகாலமாகும். இங்ஙனமாகப் பூர்வத்துக் கிரிஸ்தவர்கள் ஆராதித்துவந்திருக்க, இக்காலத்

துக் கிரிஸ்தவர்களோ உண்மையான கிரிஸ்துவையும் அவர்தம் சிஷர்களையுமறந்து, அவரது ஜனனதினப்பண்டிகை கொண்டாடவேண்டிய டிசம்பர்மாதம் 22-ஆந்தேதியைக் கைவிட்டனர். இப்பொழுது கிரிஸ்தவஜயந்தியை டிசம்பர் 25-ஆந்தேதி கொண்டாடுவார் சிலர்; ஜனவரி 6-ஆந்தேதியிற்கொண்டாடுவார்சிலர். இங்ஙனமாக ஒருவழியையும் சாராது ஜனவரி முதல்தேதியை இற்றைநாட்கிரிஸ்தவர்வருஷாரம்பப்பண்டிகைத்தினமாய்க் கொண்டாடுவது இவர்கள் சோதிடமுறையை முற்றிலும் மறந்ததனாலேயேயாமென்பது திண்ணம்.

தென்றிசையில் யாத்திரைபோயிருந்த சூரியன் மீண்டுவரும் ஸமயத்தை மகரஸங்கிரமண புண்ணியகாலமென்றேனும், கிரிஸ்தவஜயந்தி என்றேனும் கொண்டாடுங்கடமை உத்தரகோளார்த்தவாஸிகளுக்கே அமைந்தது. தக்ஷிணகோளார்த்தவாஸிகளும் இத்தகைய சூரியபூஜைசெய்யக் கடமைப்பட்டிருப்பதனால் அவர்கள் இந்தப்பண்டிகையை ஜூன்மாதம் 22-ஆந்தேதியிற் கொண்டாடுவது ஏற்றதாகும்.

காளைமாடுகளைக்கொண்டு உழவுதொழில் செய்வோர் கோ பூஜை செய்வது சரியேயாமெனினும், குதிரை, கழுதை, நீராவியந்திரங்கள் முதலியவற்றைக்கொண்டு உழுவோர் பூஜிக்கவேண்டியதும் அந்தக் கோவேயோ எனின், அதற்கு ஐயமில்லை. காமதேனுவின் பூஜையானது அது காளைமாடுகளுக்குத்தாய் என்பதனான் மாத்திரமேயன்று. அன்னம், கந்தமூலம் முதலிய உணவுகள் தேஹஸம்ரக்ஷணத்திற்கு (உடல்வளர்ப்பதற்கு) இன்றியமையாதனவாவதுபோலவே, நெய், பால், தயிர், மோர், வெண்ணெய் ஆகிய இவையும் அவசியமானவைகளாகும். அன்றியும், நெய், பால் முதலிய பொருள்கள் யஜ்ஞம் முதலிய புண்யகாரியங்களுக்கு முக்கியமானவைகளாம். ஆதலின், அப்பொருள்களை நமக்குத்தந்துதவும் கோஜாதியைப்பெற்ற காமதேனுவை ஆராதிப்பது எல்லோர்க்குங் கடமையேயாம். பால்தரக்கூடிய பிராணிகளாகிய குதிரை, கழுதை, ஒட்டை, ஆடு, பன்றிமுதலியவைகளை வைத்துவளர்க்கும் தேசங்களிலும் பால், பாற்கட்டி, பாற்பொடி, வெண்ணெய், நெய்முதலியவைகளைப் பசுவின் பாலிலிருந்தே எடுத்துப்போகிக்கின்றனர். மற்றப் பிராணிகளின் பாலானது அவை

களின் குட்டிகளுக்கு உணவாகவே பெரும்பாலும் உபயோகப்படுகின்றது. இதனாலேயே பசுவின் பெருமை நன்கு விளங்கும்.

மகரஸங்கிராந்தியென்னும் சுபகாலத்தில் நமதீசன் அருள்செய்து அளித்திருக்கும் உணவுப்பொருள்களை நாம்மாத்திரமே ஏகதேசத்தில் அநுபவியாது, "மருந்தேயாயினும் விருந்தோடுண்" என்னும் நீதிவாக்கியத்தையநுசரித்து, உற்றார், உறவினர், நண்பர் ஆகிய இவர்களுக்கு அந்தப்பண்டங்களைச் சீராக அனுப்பும்வழக்கம் அநாதியாய் ஏற்பட்டுளது. இவ் அரியவழக்கமும் இதைப்போன்ற பிறவும் இக்காலத்து நாகரிகவெள்ளத்தின் மூழ்கி அழுகிப்போகாவண்ணம் அவற்றைப்பரிபாலித்துவருவது ஆரியதர்மாபிமானிகளனைவர்க்கும் ஏற்கும்.—சுபம்.

தி. அ. ஸ்வாமிநாத ஐயர்.

உ

சாக்ரடீஸ்.

* ஸாக்ரடீஸ் சிறைச்சாலையில் இருந்தகாலத்து அவர்க்கும் கிரைட்டோவுக்கும் நடந்த சம்பாஷணை.

ஸாக்ரடீஸ்—இவ்வேளை யேன் இங்குவந்தாய், கிரைடோ? இப்போது அதிகாலையல்லவா?

கிரைடோ—ஆம், அதிகாலைதான்.

ஸாக்—இப்போது மணி என்னவிருக்கும்.

கிரை—விடிகிற சமயந்தான்.

ஸாக்—சிறைகாவலன் உன்னை உள்ளேவரவிட்டது ஆச்சரியமாயிருக்கிறது

---

* (The present dialogue and the previous article about Socrates were translations from "The trial and death of Socrates" in English by F. J. Church. M. A.)

கிரை—நான் பன்முறை இங்குவருவதால் என்னை அவன் நன்று யறிவான்; இதுவன்றி அவனுக்குச்சிறிது உதவியுஞ்செய்துள்ளேன்.

ஸாக்—நீவந்து நாழிகையாகிவிட்டதோ?

கிரை—ஆம் சிறிது நேரமாயிற்று.

ஸாக்—ஆயின் என் பேசாது வீற்றிருந்தது? என் என்னை உடனே யெழுப்பலாகாது?

கிரை—உண்மையாகவே யான் இப்பொழுது அடைந்திருக்கும் துயிலின்மையையும், துக்கத்தையும் ஒழித்தல் எனக்கு விருப்பமே; ஆயினும் தாங்கள் எவ்வளவு அமைதியோடு துயிலுகின்றீர் என்பதை உற்றுநோக்கி வியந்துகொண்டிருந்தேன். தங்கள் தூக்கத்தைக்கெடுக்க மனமின்றித், தங்களையெழுப்பாது வாளா இருந்தேன். இதற்கு முன்பும் பன்முறை தக்கட்கு வாழ்நாள்முழுதும் மனவமைதி தீர்க்கமாயுள்ளதென்பதை உணர்ந்திருக்கிறேன். இப்போது தங்களுக்கு நேரிட்டிருக்கிற கொடுந்துயரை எவ்வளவுலேசாயும் அமைதியுடனுந் தாங்குகிறீரென்பதைப்பார்க்க, முன்னிலும் அதிகமாகத் தங்களை மதிக்கிறேன்

ஸாக்—அப்படியில்லை கிரைடோ,—என்னுடைய வயதில் சாவதற்கு வருந்தினால் மிகவும் கேவலமாயிருக்கும்.

கிரை—ஸாக்ரடீஸ், உம்மைப்போல் முதியவர்கள் கேட்டையடைந்ததுண்டு; ஆயினும் அவர் முதுமை (சாவுக்கு வருந்தி) விதியைக்கடிந்து கூறுதலினின்றும் அவரைத்தடுக்கவில்லை.

ஸாக்—சரிதான்; அது அப்படியிருக்கலாம். நீ என் இவ்வளவு சீக்கிரம் இங்குவந்தாய், சொல்?

கிரை—நான் ஒரு துக்ககரமான செய்தியைக் கொணர்ந்திருக்கிறேன். உமக்கு அது துக்ககரமாகத் தோற்றாது. எனக்கும், உம்முடைய நண்பரனைவருக்கும் அதுமிகுந்த துக்கத்தையும் மனவருத்தத்தையும் தருகின்றது. எனக்குக்கொடுப்பதுபோல மற்றெவருக்கும் மிகுந்தவருத்தத்தை அது கொடாதென்பது என் துணிபு.

ஸாக்—அது என்ன? டிலாஸ் நகரத்திலிருந்து கப்பல்வந்ததும் நான் இறக்கவேண்டுமென்று சொன்னார்களே, அது வந்துவிட்டதோ?

கிரை—இல்லை; அது இன்னும் இங்கு வந்துசேரவில்லை. சூனியம் (Sunium) என்ற நகரில் அக்கப்பலைவிட்டுவந்த சிலர் கூற்றால் அது இன்றுவருமென்று எண்ணுகிறேன். அவர்மொழியால், அது இன்று இங்குவந்து சேருவது நிச்சயம்என்று தெரிகிறது. நாளை உமது ஆயுள்முடிய வேண்டிவரும்.

ஸாக்—சரி, கிரைடோ தெய்வானுகூலத்தால் முடியட்டும். தெய்வங்கட்கு மனதிருந்தால் அப்படியே நடக்கட்டும். ஆயினும் கப்பல் இன்று இங்குவருமென்று எனக்குத்தோற்றவில்லை.

கிரை—ஏன் வராதென்று நினைக்கிறீர்?

ஸாக்—சொல்லுகிறேன்; நான் கப்பல்வந்துசேர்ந்த மறுநாள் இறக்கவேண்டுமல்லவா?

கிரை—அதிகாரிகள் அப்படித்தான் சொல்லுகிறார்கள்.

ஸாக்—அப்படியாயின் கப்பல் இன்றுவருமென்று எனக்குத் தோன்றவில்லை நாளைத்தான்வரும். இரவில் சற்றுமுன்பு நான் கண்ட கனவால் எனக்கு அப்படித்தெரிகிறது. நீ என்னை யெழுப்பாதது நன்மையென்றே நினைக்கிறேன்.

கிரை—நீர்கண்ட கனவென்ன?

ஸாக்—வெள்ளையுடைதரித்த மிக்க அழகிய ஒருஸ்த்ரீ என்னிடம் வந்து "சாக்ரடீஸ், நாள்மூன்றில் நீர் வானகம்புகுவீர்." என்று சொன்னதாகத் தோற்றிற்று.

கிரை—என்ன ஆச்சரியமான கனவு, ஸாக்ரடீஸ்!

ஸாக்—ஆயினும் அக்கனவின்பொருள் என்மட்டில் நன்கு விளங்குகிறது.

கிரை—ஆம், தெளிவாக எனக்கும் தோற்றுகிறது. ஆதலின் ஸாக்ரடீஸ்! உத்தம! கடைசிமுறை என்வார்த்தையைக்கேட்டு உமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுகிறேன். எனக்கு உம்முடைய இறப்பு ஒருதுயராகாது பலதுயராகவே முடியும். எங்கும் காணுதற்கரிய ஒருநண்பரையிழத்தலோடு, உம்மையும் என்னையும் அறியாதபலர் பணத்தைச்செலவுசெய்யச் சித்தமாயிருந்தால் உம்மைக் காப்பாற்றியிருக்கலாம்; நான் அப்படிச்செய்யாது ஒழிந்தேனென்று என்னைப்பற்றி விபரீதமாக எண்ணும் எண்ணங்களுக்கும் ஆளாவேன். நண்பர்களைமதியாது பணத்தையே போற்றும் குணத்தைவிட இழிந்ததெது? உம்மைக்காப்பாற்ற மிகுந்த ஆவல் எங்கட்கு இருந்து முயன்றும் நீரே சிறையைவிட்டுத் தப்பியோட மறுத்தீர் என்பதை உலகம் ஒருபோதும் நம்பாது.

ஸாக்—உயர்குணத்தோனே, கிரைடோ, உலகத்தார் அபிப்பிராயத்தை நாம் என் அவ்வளவு மதிக்கவேண்டும்? நாம் யாருடைய அபிப்பிராயத்தைப்போற்ற வேண்டுமோ அம்மேன்மக்களெல்லாம், நாம் சரியானவழியில் நடந்தோமென்றே ஒப்புக்கொள்வார்கள்.

கிரை—ஆயினும் ஸாக்ரடீஸ், உலகத்தின் அபிப்பிராயத்தைக் கவனித்தல் அவசியம் என்பது உமக்குத்தெரிந்ததுதான். ஜனக்கூட்டத்தின்முன் சாட்டப்பட்ட பொய்க்குற்றமும் ஒருவனுக்குச் சிறியதன்றிப் பெரியதீங்கையும் விளைவிக்கும் என்பதை உமது விஷயமே மெய்ப்பிக்கின்றது.

ஸாக்—கிரைடோ, ஜனக்கூட்டத்தினது அபிப்பிராயம் ஒருவனுக்கு மிக்கதீங்கை விளைவிக்கக்கூடுமாயின், அவ்வபிப்பிராயமே ஒருவனுக்கு மிக்கநன்மையையும் விளைவிக்கக்கூடுமென்பது எனதெண்ணம்; இது சிலாக்கியமே. ஆனால் அவர்களால் இரண்டும் ஆவன வல்ல. ஒருமனிதனைப் புத்திசாலியாக்குதல் அல்லது முட்டாள் ஆக்குதல் அவரால் இயலாது. மனதிற்குத்தோன்றியவாறு அவர்கள் நடக்கிறார்கள்.

கிரை—சரி, அப்படியாயின் இருக்கட்டும். எனக்கு இதைச் சொல்லும்; உண்மையாகவே என்னைப்பற்றியும் உம்முடைய பிற

நண்பர்களைப்பற்றியும் உமக்கு விசாரமில்லை. ஆயினும் ஒற்றர்கள், நாங்கள் உம்மைத் திருட்டுத்தனமாக வெளியேற்றிவிட்டோமென்று அறிவிப்பார்கள்; அதனால் எங்களுக்கு விபத்துநேரிடும்; பணச்செலவு வரும்; ஒருவேளையெங்கள் ஆஸ்தியெல்லாமிழக்கவேண்டி வரினும் வரும்; பின்னும் அத்துடன் வேறுதண்டனைக்குள்ளானாலும் ஆவோம் என்று பயப்படுகிறீரல்லவா? அவ்வித அச்சமிருப்பின் அதனை ஒழித்துவிடும். அவ்விதமான கஷ்டங்கட்கு உள்ளாகக் கடமைப்பட்டிருக்கிறோம். அவசியமானால் உம்மைக்காப்பாற்றுவதில் இன்னும் பெரியதுன்பங்கட்கும் உள்ளாகத் தயாராயிருக்கிறோம். ஆதலின் என்வார்த்தையைக்கேட்க மறுக்காதிர்.

ஸாக்—எனக்கு இதுவிஷயமாகவும் துக்கமுண்டு; கிரைடோ, வேறுவிஷயம்பற்றி இதினுமதிகத் துக்கமுண்டு.

கிரை—இருந்தால் அதைப்பற்றிப் பயப்படாதீர். அதிகப்பணம் கேளாமல் உம்மைச் சிறையினின்றும் வெளியேற்றிக்கொணர மனிதர் சித்தமாயிருக்கிறார்கள். வெளியேறியபிறகு ஒற்றர்களை இலகுவாகப் பணத்தைக்கொடுத்து நம்பக்கல் சேர்த்துவிடலாம். பின் அவர்களால் பணச்செலவுக்குக் காரணமில்லை. என் ஆஸ்தியெல்லாம் நும்பொருட்டிருக்கிறது. அதுபோதுமென்றே நினைக்கிறேன். என் பணத்தைச்செலவிடுவதில் தங்கட்கு ஏதேனும் மனமொவ்வாதாயின் இவ்வாதன்ஸ் நகரில் தங்கட்குத்தெரிந்த அந்நியவாசிகள் தங்களுடைய பணத்தைச் செலவிடத்தயாராயிருக்கிறார்கள். அவருள் தீப்ஸ்நகரத்து "ஸிம்மியாஸ்" என்றவொருவர் இதற்காகவே போதுமான பணம்கொணர்ந்திருக்கிறார். இன்னும் "ஸேப்ஸ்" முதலிய பல்லோரும் சித்தமாயிருக்கிறார். ஆதலின் மேற்சொல்லிய காரணத்தைக்கொண்டு உம்மைக்காப்பாற்றிக்கொள்வதினின்றும் பின்வாங்காதீர். "நாட்டைவிட்டுப் போகச்சொன்னால் நான் என்னசெய்வது என்பது எனக்கேதெரியாது" என்று நியாயாதிபதிமுன் தாங்கள் முன்புசொன்னது தங்களைத்தடைசெய்யாதொழிக. ஏனெனில் தாங்கள் செல்வதற்கு எத்தனையோ இடங்கள் இருக்கின்றன. அவ்விடத்தாரெல்லாம் தங்களை நல்வரவேற்று ஆதரிப்பார்கள். "தெஸலே" யென்னும் நகர்க்குப்போகச் சம்மதித்தால் அங்கு என் நண்பர்

பலர் இருக்கிறார்கள். அவர்கள் உம்மை நன்குபாராட்டிக்கொண்டாடுவார்கள். அவ்விடத்துச் சனங்களால் உமக்குத்துன்பம்வராது காப்பாற்றுவார்கள். ஸாக்ரடீஸ், இன்னும் உம்முயிரைக்காப்பாற்ற வழியிருப்பவும் அதைத்துறப்பது, நீரே தீமைசெய்வதாகுமென்று எண்ணுகின்றேன். உம்முடைய விரோதிகளின் வழியைப்பற்றியே நீர் நடக்கின்றீர். நீர் செல்லும்வழி உம்மைக்கெடுக்கநினைக்கிறவர்களின் வழியே. இதுமாத்திரமல்ல; உம்முடைய குழந்தைகளை நீர் கைவிடுபவராகக் காணப்படுகிறீர். நீர் குழந்தைகளை வளர்த்துப் படிப்பிக்கவேண்டியிருக்க அவர்களை விதிவசம் ஒப்பிக்கின்றீர். அவர் தலைவிதி, பெற்றோரில்லாத அநாதைக்குழந்தைகளின் கதியைப்போலவே முடியும். குழந்தைகளைப்பாடுபட்டு வளர்த்துப்படிப்பிக்கத் தயாராயிருந்தாலொழிய நீர் குழந்தைகளைப்பெற்றிருத்தல்கூடாது. உமது வாழ்நாள் முழுதும் நன்னடை (Virtue) யைப்பற்றி மிகுத்துக் கூறியும் நீரே நல்வழியிற்செல்லும் திடங்கொண்ட புருஷன் போகும்வழியைப்பற்றாதுவிடுத்து, இலேசான ஒருவழியைத் தேடுகிறீரென்று எனக்குத்தோன்றுகிறது. நான் சம்பந்தப்பட்டமட்டில் உமக்காகவும் உமது நண்பர்களான எங்கட்காகவும் வெட்கப்படுகிறேன். விசாரணைக்குவரவேண்டியதே அவசியமில்லாததாயிருக்க, நீர் நியாயஸ்தலத்துக்குவந்தது, விசாரணை நடந்தவிதம், கடைசியாக எல்லாவற்றிற்கும் கேவலமான உம்முடைய தற்காலநிலைமை ஆகிய (உமக்கு நேர்ந்த) இவையெல்லாம் எமது அச்சத்தால் உண்டானதென்று சனங்கள் நினைப்பார்கள். கொடுந்துன்பத்தை விலக்காமல் நாங்கள்கேவலம் அச்சத்தினால் பின்வாங்கியதாகப் பிறர்க்குக்காணப்படும். ஏனெனில், நாங்கள் உம்மைக்காப்பாற்றக் கூடவில்லை; எங்களால் முடிந்தவரை எங்களைக்கொண்டு உம்மைக்காப்பாற்றிக்கொள்ள வழியிருக்க நீரும் அப்படிச்செய்யாது ஒழிகிறீர். ஸாக்ரடீஸ், ஜாக்கிரதை; இவை தீமைவிளைத்தலோடு உமக்கும் எமக்கும் அவமரியாதையுங்கொணரும்; ஆதலின், செவ்வனே ஓர்ந்து பாரும்: இல்லை, யோசித்துப்பார்க்கும்வேளை சென்றுவிட்டது. நாம் இப்போது ஒருமுடிவுக்குவருதல் அவசியம். ஓரேவழிதான் நமக்கு இப்போது உளது. அவ்வழியைப்பற்றிய எல்லாம் இன்றிரவே செய்தல்வேண்டும். இனித்தாமதித்தால் நமக்குக் குடிமுழுகிப்போ

கும். ஸாக்ரடீஸ், என்சொற்படி நடப்பதை மறுக்காதிருக்க உம்மைவருந்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸாக்—என் அன்பிற்குரியநண்ப, கிரைடோ, என்னைக்காப்பாற்றுவதிலுள்ள உன்விசாரம் நல்வழியதாயின் மிகச்சிறந்ததே. நல்வழியல்லதாயின் பின்னும் பெரியகெடுதலை விளைக்கும். ஆதலின் நீ சொல்வதுபோலச்செய்தல் வேண்டுமோ, வேண்டாவோ என்பதைப்பற்றி உசாவுவோம். இதுவரையிருந்ததுபோலவே இப்பொழுதும் நான் என்மனச்சாட்சிப்படி நடப்பேனேயன்றி வேறொருவர் வார்த்தையையும் கேட்பேனல்லேன். யோசித்துப்பார்த்தால் அதுவே நல்வழியென்று எனக்குப்படுகிறது. எனக்கு இந்த ஆபத்துவந்ததனால் நான் முன்கொண்டகொள்கைகளைத் தள்ளமாட்டேன். அவை முன்தோன்றியவாறே இன்றும் உண்மையான வழிகளென எனக்குத் தோற்றுவதால் நான் அவைகளை நன்குமதித்துப்போற்றுகின்றேன். குழந்தைகளைப் பேய்கள் வெருட்டுவதுபோல, ஜனக்கூட்டம் தம் அதிகாரத்தால் நூதன பயங்கள்காட்டி நம்மைவெருட்டி, நமக்குப்புதிய அபராதங்கள் விதித்து, நம்மைச்சிறைப்படுத்தி, மரணதண்டனைக்குள்ளாக்கினும் நான்கொண்ட கொள்கையை மாற்றுவதற்குத் தக்ககாரணம் ஏற்பட்டாலொழிய உண்மையாகவே உன்னுடைய ஆலோசனையை ஒருபோதும் ஏற்கேன். இந்தநிலைமையில், இப்பொழுது நம்மிருவருக்கும் உள்ள வியவகாரத்தைப்பற்றி ஆராய்வது எங்ஙனம்? ஆயினும் மனிதரின் அபிப்பிராயபேதங்களைப்பற்றிச் சற்று முன்புநீ கூறியதை முதலில் எடுத்துக்கொள்வோம். அவர்களுடைய அபிப்பிராயங்களுள், சிலவற்றைக் கவனிக்கவேண்டுமேயன்றி மற்றவைகளைக்கவனித்தல் அநாவசியம் என்று நாமிருவரும் முன்கொண்டிருந்தகொள்கை சரியா என்று ஆராய்வோம். எனக்கு மரணதண்டனை விதிக்கப்படுமுன் நாம் அப்படிக்கொண்டது சரியாக இருந்ததே! இப்போது மனதுக்குத்தோன்றியவாறுபேசி, வழக்குக்காக வாதாடவேண்டுமேயென்று வாதாடி முன்கூறியதெல்லாம் விளையாட்டினுரைத்த வெற்றுரையென்றால் அது நமக்கு அடுக்குமோ? கிரைடோ, உன்னுடைய உதவியைக்கொண்டு, நமதுபழைய கொள்கைகளையெல்லாம் ஆராய்ந்து, என் தற்காலநிலையெவ்விதத்

திலேனும் அவற்றின் உண்மையை மாற்றினதாகத் தோற்றுகிறதோ என்று பார்த்து, அவற்றைநாம் முற்றிலும் நீக்கவேண்டுமா, அல்லது கைக்கொள்ளவேண்டுமா என்று கவனிக்க அவாவுகின்றேன். ஆராய்ச்சியிற்சிறந்த நம்மவர்கள், நான் சற்றுமுன்புசொல்லியபடியே, மனிதர்கள் மேன்மையாகக்கொண்டாடும் சில அபிப்பிராயங்களைப் பாராட்டவேண்டுமேயன்றி மற்றவைகளைப் பாராட்டவேண்டுவதில்லையென்று சொல்லுவது என்றுமுள்ளவழக்கம். கிரைடோ, தயவுசெய்து நீயே சொல். அவர்கள் சொல்வது உண்மையல்லவா? மனுஷ்யயத்தனப்படி நீ நாளைச்சாகவேண்டிய நிலையில் இல்லை ஆதலால் உன்னுடைய நிர்மானம் ஒருசார்புடையதாகாது. ஆதலின் நன்றாக நிதானித்துப்பார். நாம் மனிதருடைய எல்லாக்கொள்கைகளையும் மதிக்கவேண்டுவதில்லை; சிலவற்றையே மதிக்கவேண்டும். அன்றியும் எல்லா மனிதருடைய கொள்கைகளையும் மதிக்கவேண்டுவதில்லை; (மேதாவிகளான) சிலருடைய கொள்கைகளையே மதிக்கவேண்டும்: என்று நிர்மானித்துச்சொல்வது உனக்கு நியாயமாகத்தோற்றவில்லையா? நீ யென்ன நினைக்கிறாய்? (நான் சொன்ன) இது உண்மையல்லவா?

கிரை—ஆம் உண்மைதான்.

(இன்னும் வரும்.)

R அரங்காசாரியர்.

உ

மகாசிவராத்திரி மகிமை.

ஆதிகாலத்தில் பரசிவனால் தோற்றுவிக்கப்பட்ட பாயவுலகை யழித்து யொடுங்கிய கற்பமுடிவினிரவிலே நான்குயாமத்தும் சர்வலோகமாதாவாகிய உமாதேவியார் பரமேசுரபிரபுவை ஆகமவிதிப்படி அர்ச்சனைபுரிந்து அவ்வுகாந்தத்திருட்பொழுதகன்றபின் அப்பரமேசுரபிரபுவின் திருவடிகளிற் பணிந்து தமியேன் பூசித்த இரவை வானும்புவியு மநுஷ்டிக்கவும், அவ்வாறநுஷ்டித்தோர்க்குப்

புத்திமுத்தியையளித்தல்வேண்டு மெனப்பிரார்த்திக்க அங்ஙனமே யளிப்போமென்றநுக்கிரகித்தனர். அவ்விரவே சிவராத்திரியென வழங்கலாயிற்று.

சிவராத்திரிபுராணம்.

"பெற்றுயர்கற்பவீற்றுலகின்றபிதாமகனுலந்துபேருலக
முற்றுமற்றெருங்கிப்பிரளயத்துயிர்கண்மூடிர்திடுங்கங்குலினுளத்தன்
புற்றுமாமறையாகமவிதிப்படிவண்டுழுதுதேனுண்டுபோட்டயரும்
பொற்றுணர்க்கடுக்கைத்தொடைமிடைசடிலப்புனிதனையருச்சனைபுரிந்தாள்

"யாமமோர்நான்குஞ்சென்றகன்றுகாந்தத்திருட்பொழுதகன்றபினிதழித்
தாமமார்புனைந்தசோமசேகரன்பொற்றாளிணைபணிந்தவன்றனது
வாமமாரிமயவல்லியின்றனைநான்வழிபடுகங்குல்வானவரு
நாமநீர்வேலியுலகுளோரெவருஞ்சிவநிசியெனநவின்றிடவும்."

"இச்சிவநிசிநோற்றியாவராயினுமுன்னிணையடித்தாமரைகருதிப்
பச்சிமத்தடைந்தபரிதிபூருவத்திற்பருப்பதத்துதித்திடுமளவு
நச்சிநற்பூசைபுரிந்தவர்முத்திநண்ணவும்வேண்டுமென்றிரப்ப
வுச்சியின்மணிசேருரகபூடணனுமுமையவட்கவ்வரமளித்தான்."

இஃதன்றியும் பின்னோர்காலத்து இருபத்தர்கள்மூலமாய் இவ்வுலகிற்கு இச்சிவராத்திரியின்மகிமையை விளக்குவான்வேண்டிச் செஞ்சுடராகிநின்றபின்னர் போகத்தானமாகிய நிட்கள சகளமென்னுமவ்வருவுருவத்தினின்று அதிகாரத்தானமாகிய சகளமென்னுமுருவத்தைத் தாங்கியருளினர். அவ்விருபத்தர்களும் அத்திருவுருவைக்கண்டின்புற்றுக்களிப்பெனுங்கடலினுக்கெல்லை காண்கிலராகித் தோத்திரஞ்செய்தனர்.

சிவராத்திரிபுராணம்.

"மாசிமாதத்திற்றேய்ந்துமதிக்கலைகுறைந்துதேயு
மாசில்பன்னான்காம்பக்கத்தரையிருளியாமந்தன்னிற்
றேசினல்விளங்குஞ்சோதிச்செஞ்சுடராகிநின்ற
காசிலாநுதற்கட்பெம்மான்றனதுருக்காட்டிநின்றான்."

"நீலகண்டமுமெண்டோளுநெற்றியிற்கண்ணுநீறுங்
காலனைக்காய்ந்தகாலுங்கையின்மான்மழுவுங்கண்டு
மாலவன்வாமந்தன்னின்மலரயன்வலப்பானின்று
சூலபாணியைநோக்கித்துதிபலசொல்லலுற்றார்."

பசுக்கள் பதியை வணங்கியுய்யும்பொருட்டே அகம் மொழி தனுவென்னும் முக்காரணங்களும் ஏற்பட்டுள்ளன. அவற்றுள் அகம் அவருடைய வடிவைத்தியானஞ்செய்ய உதவுகின்றது. வாக்கு அவருடைய மந்திரங்களைச்செபிக்க உதவுகின்றது. காயம் அவரையருச்சித்தற்கும் அவரை வழிபடுதற்குமுதவுகின்றது. ஆனால் அவர் இம் மூன்றுக்கும் எட்டுபவரல்லர் அதீதமானவஸ்துவாயிருக்கிறார். அவர் ஒன்றுக்குமெட்டாதவருமல்லர். அறிவுக்கு எட்டுவர் ஆதலால் ஞானிகள் அவரை அறிவினாலடைந்து ஆனந்தமடைகிறார்கள். அதனால் அவ்வணக்கங்களும் புறத்தொழில் அகத்தொழில் அறிவுத்தொழில் என மூத்திறப்படுகின்றன. அதனால் கடவுள் இலக்கணமும்

சொரூபம்=தடத்தம்
காரணம்=காரியம்
மெய்=பொய்
இயற்கை=செயற்கை
அநாதி=ஆதி

என்றிருவகையாய்க் காணப்படுகின்றன. அக்கடவுள் தோற்ற நாசங்களில்லாதவராதலினாலே, அவருக்கு ஓர் உருவமிருக்குமென்று சொல்ல இடமில்லை. உருவமில்லாமையினாலே ஒரு பெயருண்டென்னவுமிடமில்லை. உருவும் பெயருமில்லாமையினாலே அவருக்கென ஓர் ஊர் உண்டென்று கூறவுமிடமில்லை இவை இல்லாமையினாலே அவருக்கென ஒரு தொழிலிருக்குமென்று சொல்லவுமிடமில்லை. அவர் அங்ஙனந் தமக்கென ஓர் ஊரும் பேரும் உருவுந் தொழிலும் இல்லாதவராயினும் ஆன்மாக்களிடத்துவைத்த பெருங்கருணையினாலே அவ்வான்மாக்களைப் பந்தித்த பாசத்தையொழித்து உய்வித்தல் ஏதுவாக ஊரும் பேரும் உருவுந் தொழிலுங்கொண்டருளுவர். அதனால் அவருடையநிலை சொரூபமென்றுந் தடத்தமென்றும் இரு வேறுவகைப்படுவதாயிற்று.

நமது ஸ்ரீ கச்சியப்பசிவாசாரியர் கந்தபுராணத்தில் சிவவணக்கங் கூறியவிடத்து சொரூபநிலையையும், தடத்த நிலையினுள்ள இலயபோகவதிகாரத்தையும் முறையே ஆறு செய்யுட்களாலும் அமைத்துள்ளனவற்றை அறிஞர்கள் யாருமறியற்பாலதே."

கந்தபுராணம்.

"திருவந்ததொல்லைப் புவனத்தொடு தேவர்போற்றிப்
பெருவந்தனை செய்தறிதற்கரும் பெற்றியெய்தி
யருவந்தனையு முருவத்தையு மன்றிநின்று
னொருவன்றனது பதந்தன்னை யுளத்துள்வைப்பாம்."

அருவந்தனையும் — இலயத்தானமாகிய நிட்களமென்னும் அருவத்தையும்.

உருவத்தையும் — அதிகாரத்தானமாகிய சகளமென்னும் உருவத்தையும் என்று கூறினமையால் இவ்விரண்டிற்கும் நடுநின்றபோகத்தானமாகிய, நிட்கள சகளமென்னும் அருவுருவத்தையும், அமைத்துக்கூறினரென்க.

அன்றி நின்றுனென்றமையால் இதற்கப்பாற்பட்டுள்ள சொரூபநிலையின் வணக்கத்தையுணர்த்திற்று. இன்னும் இதன் பின்னுள்ள செய்யுள்களில் நீள்கழற்கன்புசெய்வாம் என்றும், அரனடிசென்னிசேர்த்துவா மென்றும், பூங்கழல்கள்போற்றுவாமென்றும், மலரடிபோற்றி செய்துவாமென்றும், திருநடச்செயலையேத்துவாமென்றும் கூறியதுபோலாகாமல் பதந்தன்னை யுளத்துள் வைப்பாம் என்றமையாலுந்தெற்றன விளங்கும்.

ஆதலால் சர்வகருணாநிதியாகிய பரமேசுரபிரபுவானவர் தான் இவ்வாறு திருவுருக்கொண்டு சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்து அளத்தற்கரிய சிவவிரதங்களுள் அம்பிகைபூசித்த மகாசிவராத்திரியின் மகிமையை நந்திதேவருக்கருளிப் பரவச்செய்தனர்.

மகா சிவராத்திரி விரதபலன்.

சிவராத்திரிபுராணம்.

" ஆதியிலம்பிகைநோற்றவிரதமிதன்பெருமையெவராளக்கவல்லார்
சாதிமுறைநெறிதவறுஞ்சண்டாளர்நோற்றிடினுந்தக்கோராகி
மோதிவருங்கடல்புடைசூழுலகில்விரும்பியபோகமுற்றிப்பின்னர்ப்
பூதிதரும்பெரும்பாவக்கடல்கடந்துமுத்திநெறிபொருந்துவாரால்."

ஆவிந்தமறையவர்கட்களித்தாலும்புரவிமகமாற்றினுலு
மேவிந்தசிவநிசிபோற்பலன்றூராவெனவியந்துவிண்ணினேங்கு
மாவிந்தநடைபயின்றுவந்தனையகரியுரித்தவரதன்வாமக்
கோவிந்தனரவிந்தன்கோவிந்தன்முகநோக்கிக்கூறிப்போனன்."

(இன்னும் வரும்).

சு. நடேசதேசிகன்.

தமிழ்ப்பண்டிதன்.

பசுவைப்பற்றிய ஆராய்ச்சி.

உலகில் அநேகர்கள் எல்லாமிருகங்களைப்போலவே பசுக்களு மொருவகை மிருகமெனக் குறித்திருக்கின்றார்களாதலால், அப்பசுக்களின் மகத்துவத்தை யியன்றமட்டும் ஆராய்ச்சிசெய்து எழுதியிருக்கிறது.

பசுக்களைப்பாதுகாத்துப் பூசிப்பது சிவதருமங்களுளொன்றுமென்று அகத்தியமகாமுனிவருக்குக் குமரக்கடவுள் உபதேசித்தருளியதாகச் சிவதருமோத்தரத்திற் கூறியிருக்கிறது. அதனையிங்கே பின்னர் விரித்தெழுதப்படும்.

பசுக்களின் சாணமும் நீருமே உலகிற்பயிர்கள் விருத்தியாய் விளைவதற்குச் சிறந்தவுபகரணமாயிருக்கின்றன. திருவள்ளுவநாயனாரும், "ஏரினுநன்றாலெருவிடுதல்" எனக்கூறியருளினர். விளைநிலங்களிலே பசுக்கள் சுவாசத்தைவிடுதலும், படுத்துக்கிடப்பதும், நீருஞ்சாணமும்போல மிகப்பயன்றருமென உழவர்களுங் கூறுகின்றார்கள். இவைகளின் பஞ்சகௌவியங்கள், ஆலயங்கட்கும், யாகமுதலியகிரியைகட்கும், பரிசுத்தஞ்செய்வதற்கும், வைத்தியநூல்களிற்கூறியபடி அநேகவிதமருந்துகள் செய்வதற்கும் உபயோகமாயிருக்கின்றன. இவைகளன்றிக் கோரோசனையும் ஆலயங்கட்குபயோகமாகுவதன்றி அநேகவித மருந்துகட்கும் உபயோகமாகின்றது. "பாலுநெய்யு முணவுற்றார் பாரிற்கொடிய பிணியற்றார்" என்றபடி அவைகளையுண்போர்க்குப் பிணியில்லையென்பது, யாவருமறிந்தவிஷயமே. நெய்யும்பாலுஞ்சேராத போஜனமும் பலகாரமும் பிரயோசனமில்லை; ஔவையாரும்;—"நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லாவுண்டிபாழ்" எனக் கூறியிருக்கின்றார்.

இன்னும் பஞ்சகௌவியக்கூட்டும் விதிப்படி அவைகட்குரியதேவதைகளை யவைகளில் மந்திரங்களினால் ஆவாகனஞ்செய்து பூஜித்துக் கூட்டியருந்தினாற் பாவநீங்குமென்று நூல்களிற் கூறியிருக்கின்ற

னர். திருவிளையாடற்புராணம், வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலத்தில், "ஆனிந்தாவினகைமணிக்கோடுதோய்த்த ஙளிர்புனல்குடித்தும்" எனக்கூறியிருத்தல் காண்க. பஞ்சகௌவியம்கூட்டும் விதியைத் தணிகைப்புராணம், அகத்தியன்அருள்பெறுபடலத்தில் சஉஎ, சஉஅ, சஉகூ, சஙO-ஆங் கவிகளிற்காண்க.

இனி, "ஆபயன்குன்றுமறுதொழிலோர் நூன்மறப்பர்-காவலன் காவானெனின்." எனக்கூறிய குறளுரையிற் பசுக்கள் பால்குன்றிய வழித் தேவர்கட்கு வேள்விசெய்து அவிகொடுப்பதில்லை யென்பதும், அதுகொடுத்தற்குரியவர் மந்திரம், கற்பம் முதலிய நூல்களையோத மாட்டாரென்பதும், வேள்வியில்லையாகவே மழையும் பெய்யாதென்பதும் விளங்கக்கூறியிருக்கின்றார்; இதனால், உலகில் மழைபெய்வதற்குப் பசுக்கள் இன்றியமையாச் சிறந்தகாரணமாயிருக்கின்றன வென்பது கருத்தாயிற்று.

இன்னும் இப்பசுக்களின் மகிமையைக்கூறுங்கால், பெரியபுராணத்திலே சண்டேசுரநாயனார், சேய்ஞ்ஞலூர்ப்பசுக்களைமேய்க்கின்ற ஓரிடையன் ஒருபசுவைக் கோல்கொண்டடிக்கக்கண்டு, "ஆவின்பெருமையுள்ளபடியறிந்தார்" ஆகிய அந்நாயனார் அவ்விடையன்மீது கோபமுற்று அவனைவிலக்கிப் பசுக்களின் அங்கங்களிலே தீர்த்தங்கள், முனிவர்கள், தேவர்களெல்லாரும் வசித்திருக்கின்றார்கள்; அன்றியுஞ், சிவபிரான் திருமஞ்சனங்கொள்வதற்குப் பஞ்சகௌவியங் கொடுப்பனவாயும், சிவபிரானணிதற்குத் * திருநீறுண்டாகுஞ் சாணத்தைக் கொடுப்பனவாயும், சிவபிரான் உமாதேவியுடனெழுந்தருளும் வாகனமாகிய ரிஷபதேவர் குலமுள்ளனவாயு மிருப்பனவாகும்; இம்மகிமையுள்ள பசுக்களைமேய்க்குந்தொழிலை நீ இனி விட்டுவிடுவாய்! நானே மேய்க்கின்றேனென்று கூறி யவனைவிலக்கி, அவ்வூர் மறையோ ரிசைவுபெற்றுக்கொண்டு, கோனுங்காயிறுங்கொண்டு புறப்பட்டு, நல்லபுல்லுள்ள தானங்களிலே கொண்டுபோய் மேய்த்து, நல்லதண்ணீரூட்டி நல்லநிழலிலேதங்குவித்து, மாலைப்போழ்தில் விடு

---

* திருநீற்றின் மகத்துவத்தைத் திருஞானசம்பந்தநாயனார் திருநீற்றுப் பதிகத்திலே விரித்துக்கூறியருளியிருக்கின்றது காண்க.

தோறுங் கொண்டுசேர்ப்பாராயினர். இவர் மேய்ப்பதற்குத்தொடங்கிய நாண்முதலாக "ஆயநிரையின் குலமெல்லாமழகின் விளங்கி மிகப்பல்கி - மேயவினியபுல்லுணவும் விரும்புபுனலுமார்தலினு-லேயமனங்கொள் பெருமகிழ்ச்சி யெய்தியிரவு நண்பகலுந்-துயதீம்பால் மடிபெருகிச் சொரியமுலைகள் சுரந்தனவால்." என்றபடி கறவாமலே தாமேபால் சொரியக்கண்டு, அதனைச் சிவபிரானுக்குத் திருமஞ்சனமாகும்படிசெய்து சிவபூசை செய்தருளினுரென்றும், "இறையோனடிக்கீழ் மறையவனு லெடுத்துத் திருமஞ்சனமாட்டு - நிறைபூசனைக்குக் குடங்கள்பா னிரம்பச் சொரிந்து நிரைக்குலங்கள் - குறைபாடின்றி மடிபெருகக் குவிந்தமுலைப்பால் குறைவின்றி - மறையோர் மனையின் முன்புதரும் வளங்கள்பொலியவவருமால்." என்றபடி அப்பசுக்களிருந்தனவென்றுங் கூறியிருக்கின்றது.

இவர்மாத்திரமோ! ஸ்ரீகைலாயத்திலே நந்திபெருமானருள்பெற்றிருந்த ஒரு சிவயோகியார் அகத்தியமகாமுனிவரைக் காண்பதற்காகத் தென்றிசைநோக்கிப் புறப்பட்டுக் கேதாரமுதலிய தலங்களைத் தெரிசித்துத் திருவாவடுதுறையிலும்வந்து சுவாமிதெரிசனஞ்செய்து காவிரிக்கரைவழி செல்லும்போது, அவ்வாற்றங்கரைக்கருகிலிருக்கின்ற வனத்திலே மேய்ந்துகொண்டிருந்த பசுக்கள் தங்களை மேய்ப்பவனாகிய சாத்தனூரிடையன் மூலன் என்பவன் இறந்துகிடக்கக் கண்டு, அவன் சரீரத்தைச்சுற்றிவந்தணைந்து சுழன்று கதறியழுவதைக்கண்டு, அச்சிவயோகியார் அப்பசுக்களின் மகிமையறிந்தவராதலால் அவைகளின் றுயரத்தை நீக்கவேண்டுமென்று ஆலோசித்து, இவ்விடையனுயிர்பெற்றெழுந்தாலன்றி யிப்பசுக்கள் துயரநீங்காவென்று திருவுளங்கொண்டு, தம்முடைய திருமேனிக்குக் காவல்செய்து, தாம் அவனுடைய சரீரத்திலே பிரவேசித்துத் திருமூலராயெழுந்தார். உடனே பசுக்களெல்லா மிகமகிழ்ந்து நாத்தழும்ப நக்கி மோந்து கனைத்துவாலெடுத்துத் துள்ளிமேய்ந்தன; பின்பு அத்திருமூலநாயனுர்கண்டு திருவுளமகிழ்ந்து, "ஆவினிரைமகிழ்வுறக் கண்டளிகூர்ந்த வருளினராய் - மேவியவை மேய்விடத்துப்பின்சென்றமேய்ந்தவைதாம் -காவிரிமுன் றுறைத்தண்ணீர் கலந்துண்டு கறையேறப்- பூவிரிதண் புறவினிழ லினிதாகப் புறங்காத்தார்." என்றபடி, அவை

கள் மேயுமிடத்திற் சென்று மேய்த்துக்காத்து அந்திக்காலத்திலே அவைகளைச் சாத்தனூரிலே வீடுகடோறும் புகச்செலுத்தினரெனத் திருமூலநாயனாரும் பசுக்களின் மகிமையை வெளிப்படுத்தியிருக்கின்றார். இதனைப்பெரியபுராணத்தில், திருமூலநாயனார் புராணத்திற் காண்க.

இனிச், சிவதருமோத்தரத்திற் கூறியவாறு பசுக்களினுற்பத்தியும், அவைகளின் மகிமையும், அவைகளாலெய்தும் பயனும் வருமாறு:—

திருக்கைலாயமலையிற் சிவபெருமான் சந்நிதியிலே ரிஷபமிருக்கின்றது. அதன்பக்கத்தே, நந்தை, சுபத்திரை, சுரபி, சுசீலை, சுமனை யென ஐவகைப் பசுக்களிருக்கின்றன; அவைகளைச் சிவபெருமான், உயிர்கட்கிரங்கிப் பூவுலகிற்பிறக்கும்படி செய்தலால், அவைகள் பாற்கடலிற்பிறந்துவந்து, இவ்வுலகில் வாழ்வார்க்குத் துன்பங்களை நீக்கி வரங்களைக்கொடுக்கின்றன. நந்தை கபிலநிறமும், சுபத்திரை கருமைநிறமும், சுரபி வெண்மைநிறமும், சுசீலைதூமநிறமும், சுமனை தாமிரநிறமும் பெற்றிருக்கும்.

இவ்வைவகைப்பசுக்களின் பெயரைக்கூறிப் பூசைசெய்து அவற்றினுண்டாகிய, பால், தயிர், நெய், கோமயம், கோசலம், கோரோசனை யாகிய அறுவகைப் பொருளையுஞ் சிவபெருமானுக்கு எப்பொழுதும் அபிடேகஞ்செய்யவேண்டும். (கோரோசனை எப்பொழுதுங் கிடைத்தலருமை நோக்கி யதனைவிடுத்துப் பெரும்பான்மையாகப் பஞ்சகௌவியம் எப்பொழுதுங்கிடைப்பதால் தேவாரத்தில், "ஆவினுக் கருங்கலமரனஞ்சாடுதல்" எனக்கூறியருளினர்.)

பசுக்களின் கொம்பினடியிலே பிரமனும், திருமாலுமிருப்பார். கொம்பினுனியிலே கோதாவிரி முதலிய தீர்த்தங்களுஞ் சராசரமாகிய உயிர்களுமிருப்பன. சிரத்திற் சிவபிரானிருப்பார்; நெற்றியிற் சத்தியிருப்பாள், மூக்குநுனியிற் குமாரக்கடவுளிருப்பார்; மூக்கினுள்ளே இந்திரன்முதலிய தேவர்களிருப்பார்; இரண்டு காதுகளினடுவில் அச்சுவினிதேவர்களுங், கண்களிடத்துச் சூரியனுஞ் சந்திரனுங்,

தந்தத்தில் வாயுவும், நாவில் வருணனும், நெஞ்சிற் கலைமகளும், மணிகளினிடத்தில் இயமனுமியக்கருமிருப்பார்கள். உதட்டில் உதையாத்தமனத்துக்குரிய சந்திதேவதையும், கழுத்தில் இந்திரனும், முரிப்பில் அருக்கரும், மார்பிலே சாத்தியரும், நான்கு கால்களில் வாயுவும், முழந்தாளிலே மருத்துவருமிருப்பார்கள்; காற்குளம்பு நுனியில் நாகர்களும், குளம்புநடுவிற் கந்திருவரும், குளம்பின்மேலிடத்தில் அரம்பையரும், முதுகில்உருத்திரரும், சந்துகளில்அட்டவசுக்களும், அரையிற் பிதிரர்களும், யோனியிற் சத்தமாதர்களுமிருப்பார்கள். அபானத்தில் இலக்குமியும், அடிவாலில் நாகாதிபருமிருப்பார்; வாலுரோமத்தில் சூரிய னொளியும், நீரில் ஆகாயகங்கையும், கோமயத்தில் யமுனாநதியுமிருக்கும்; உரோமங்களில் மாதவர்களிருப்பார்; வயிற்றிற் பூமிதேவியிருப்பாள்; கொங்கையில் எல்லாக்கடல்களுமிருக்கும்; வயிற்றிற் காருகபத்தியமும், இருதையத்தில் ஆகவநீயமும், முகத்திலே தக்கிணாக்கினியும், எலும்பினிடத்துஞ் சுக்கிலத்தினிடத்தும் யாகத்திற் பொருந்திய கிரியைமுழுதும் பொருந்தும். எல்லாவங்கத்திலுங் கற்புடை மடவார்களிருப்பார்கள்.

இவ்வாறு தெய்வங்களெல்லாம் ஒவ்வொரு அவயவத்திலும் வசிப்பதனால் அப்பசுக்களைத் தேவாலயமென்றே கொள்ளல்வேண்டும். இம்மகிமைபெற்ற பசுக்களைமேய்த்தாலும், நடத்தினாலுங் கையிற் புனமுருக்கங்கோல்கொண்டு மெல்லமெல்ல வொற்றியொற்றிக் கெச்ச கெச்ச வென்று செலுத்தவேண்டும்; இவ்வாறுசெய்வார் சிவலோகத்தில் வாழ்வார். இரக்கமில்லாமற் கோபித்து வன்சொல்லால் அதட்டியடித்து வருத்துகின்ற அறிவில்லார் தீக்குழியாகிய நரகில் வாழ்வார்கள்.

இப்பசுக்களைப் பூசைசெய்வார்கள் மேலான பதவியடைவார்கள். பூசைசெய்யாமலும், வணங்காமலுமிருப்பவர்கள் தீவாய்நரகில் வாழ்வார்கள். புல்லைநாவிற்கொடுத்து வணங்கி வாழ்த்துவோரும் இருவினைநீங்கிச் சிவலோகத்திற் சுற்றத்தோடு வாழ்ந்திருப்பார்; திருமந்திரத்தும், "யாவர்க்குமாம் பசுவிற் கொருவாயுறை" என்றருளியிருக்கின்றார்.

பால், தயிர் முதலியவைகளைச் சிவபிரானுக் குபயோகமாகச் செய்தோர் சிவலோகம்பெறுவார். தாங்களே புசிப்போர் தீவாய்நரகஞ் சேர்வார்கள். இவைகளைக் கையாற்றொட்டாற் சகலபாவமுங் குறைந்துவிடும்.

இனிப், பசுக்கள்வசிக்குங் கொட்டிலைக் கூறப்படும்:–கீழ்த்திசையிற் பொருந்தவைத்துச் சுவர்ப்புறத்தே நான்குதிசையினும் தேவர்கட்கிசைந்த இடஞ்செய்யவேண்டும். கீழ்த்திசையிலே துர்க்கைக்கும், தென்றிசையிலே பஞ்சகௌவியங்கட்கும், மேற்றிசையிலே கணபதிக்கும், வடதிசையிலே சந்திரனுக்கும், நந்திக்கும் கோயில் செய்யவேண்டும்.

கீழ்த்திசைவாயிலிருபக்கத்திலும் நந்தி மாகாளரென்றுசொல்லப்படுமிருவரையும் பிரதிட்டைசெய்யவேண்டும். மதிலின்மேல் இடபங்களையமைத்து வைக்கவேண்டும். சுண்ணச்சாந்தின்றி மண்சாந்தாற் செய்வதாயிருந்தால், நதிக்கரைமண், தடாகக்கரைமண், வில்வத்தடிமண், புற்றுமண், அரசடிமண் இவைகளைப் பஞ்சகௌவியத்துடன் குழைத்துச் சேர்த்துக்கொள்க.

கொட்டிலைச்செய்தபின் அயனரியானுர் மூவர்க்கும் அவரவர்க்குரியபடி இடஞ்செய்து தாபிக்கவேண்டும். முதிர்ந்தகன்றுகள் தங்குமிடமும், இளங்கன்றுகள் தங்குமிடங்களும், நோய்நீக்குமிடங்களுஞ் செய்யவேண்டும். நோயுற்றபசுக்களை நோய்நீக்குமிடத்திற் புகுவித்து அவசரப்படாமலே மருந்துகொடுத்து நோய்தீர்க்கவேண்டும். நாற்றிசையிலும் வாயில்செய்து பின்பு சுண்ணம்பினுற்றீற்றி யழகாகச் செய்யவேண்டும்; கொதுகுகள் பொருந்தாமற் கோமய கோசலங்களைத் தினந்தோறுஞ் சுத்திசெய்யவேண்டும்; கொட்டிலுள்ளே அகிற்புகை முதலிய தூபங்களையுந் தீபங்களையும், நிறைத்துவைத்து மலர்மாலைதூக்கி யலங்கரித்துப் பசுக்களை யுள்ளே புகச்செய்யவேண்டும்.

புகச்செய்யும்போது சுவஸ்தி என்றசொல்லைச் சொல்லிப் பையப் பையப் புகச்செய்யவேண்டும். வள்ளைக்கொடியாற்செய்த பாய்

விரித்திருக்கவேண்டும். நல்லபுல்லையு முணவாகச் செய்திருக்கவேண்டும். அட்டமிதோறு நீராட்டிப் பூவாலருச்சித்துத் தூபதீபங்காட்டி அன்னமுதலிய நிவேதனஞ்செய்து தண்ணீரூமூட்டிப் பசுக்களை மகிழ்ச்சியுறச் செய்யவேண்டும். பசுக்களுக்குக் கொட்டிலைச் செய்தவர்கள் சூரியனுள்ளவரையுஞ் சிவலோகத்தில் எல்லாப்போகத்தையு மநுபவித்திருப்பார்கள். சிவபிரான் திருமுடிக்குப்பான் முதலியவற்றையபிடேகம் செய்பவரும் அடியார்களுக்குப் பாயசத்துடன் அமுதூட்டினவர்களும் சஞ்சிதமுதலிய வினைகணீங்கச் சிவசாயுச்சியம் பெறுவார். பசுக்களை விதிப்படி உலகத்தார் காக்கக்கடவர். காவாதவர்களை அரசன் கோபித்துக் காக்கும்படிசெய்தாற் சிவலோகத்தை யடைவான். அப்படிக்காக்கும்படிசெய்யாத அரசன் நரகத்தையடைவான். முதுவேனிற்காலமுதலிய காலங்களிற்குளிர்ச்சியுள்ள மலைப்பக்கமுள்ள வனமுதலியதானங்களின் மேய்த்துக்கொல்லவரும் புலியையுங் கொல்லவேண்டும். பசுக்கள் தினவுநீங்க உரிஞ்சுதற்குரிய கற்றூணையை † ஆவுரிஞ்சுதறியை மந்தைமுதலிய இடங்களிலே நாட்டினவர்களும், பசுக்களைச் சிவபிரானுக்குத் தானங்கொடுத்தவர்களுஞ் சிவலோகத்தி னெடுங்காலமுறைவார். பசுக்களை ஆசிரியனுக்குதவியவர்களு மிப்பலனை யடைவார். சிவபிரானுக்குக்குற்றமற்ற இடபத்தைத் தானஞ்செய்தவர் அவ்விடபத்தின் உரோமமொன்றுக்கு ஆயிரந் தேவவருடஞ் சிவலோகத்திற் புத்திர பௌத்திரருடன் போகந்துய்ப்பார்கள். இடபத்தை வாகனமாகவேறிச் செலுத்துவோர் நரகத்தையடைவார்; அதனைத்தடுக்காத மன்னவனு நகரத்தை யடைவான். இடபத்தினையு மலட்டுப்பசுக்களையும் பாரமான பண்டங்களைச் சுமக்கும்படிசெய்தவர்களை அரசன்றண்டிக்கவேண்டும். பாரங்களைச் சுமத்தினோர் அப்பாவநீங்கச் சிவபிரானுக்குப்பதினொருவெள்ளை ரிஷபத்தைத் தானஞ்செய்து ஒருவருடம் பசுக்களை மேய்க்கவேண்டும். சிவபிரானாலயப்பணிக்காக இடபங்களைத் தானஞ்செய்தவரும், இனத்தபசுக்களை வளர்த்தவருஞ் சிவலோகம் பெற்று

---

† ஆவுரிஞ்சுதறிநடுதலை, கூஉ-தருமங்களுளொன்றாகவும், ஆக்களுக்கு இரைகொடுத்தலையும், கூஉ-தருமங்களுளொன்றாகவும், காஞ்சிப்புராணம்-கழுவாய்ப்படலம் உகஅ, உஈக-ஆஞ்செய்யுட்களிற் கூறியிருக்கின்றார்.

வாழ்வார். கன்றுகள் வயிறுநிறையக் குடித்தபின் பாலைக்கறந்தவர்களும் சிவபுரஞ்சேர்வர். கன்றுக்குக் குறைவாகும்படி பால்கறந்தவர்கள் பசிமிகுந்துமுளப் பற்றொன்றுமில்லாமல் நரகடைவார்கள்; பின்பு பூமியிற்பிறந்து கடும்பசியுடன் வீடுகடோறுமிரப்பார்கள். சண்டாளர்கள் பசுக்கொட்டிலிற் புகுந்தால் அளவில்லாதகால நரகடைவார்; அவர்க்குப் பரிகாரமில்லை. பகைவர்வந்து பசுக்களைத்திருடவரின் விரைந்துகாக்கவேண்டும்; (இதனைப் பாரதத்தில் நிரைமீட்சிச்சருக்கத்திற் காண்க.) அஃது அரிதாயின் உயிரைக்கொடுத்தாயினுங் காத்தவர் சிவலோகஞ்சேர்வர். இவ்வாறே திருத்தணிகைப்புராணம் அகத்தியனருள்பெறுபடலத்திலுங் கூறியிருக்கின்றார். நிரைமீட்சியை மறநிலையறமெனக் கூறியிருக்கின்றார். பிங்கலநிகண்டு-எசுஉ-ஆஞ்செய்யுளிற் காண்க.

இம்மகிமைபொருந்திய ஒரு பசுக்கன்றின்செய்தி பெரியபுராணத்திற் கூறியவாறுவருமாறு:—திருவாரூரிலே மநுச்சோழமகாராசன் மைந்தன் திருவீதியிற் பவனிவருங்காலத்தில் ஒருபசுக்கன்றுதுள்ளி அவன் தேர்க்காலடியில் வீழ்ந்திறந்துபோயிற்று; அதனைக்கண்ட தாய்ப்பசுக் கதறிவருந்திச்சென்று அரண்மனைவாயிலிற் கட்டியிருக்கின்ற மணியைக்கொம்பினலடித்தது; உடனே அம்மணியினோசையை மநுச்சோழமகாராசன் கேட்டு வெளிவந்து நடந்ததை விசாரித்துப் பசுவின் வருத்தத்தைநோக்கித் தானும் பெருந்துயாமுற்றான்; அது கண்டு மந்திரிகள்வணங்கி நூல்களில்விதித்தபடி பிராயச்சித்தஞ்செய்யலாகும்; திருவுளந்தளர வேண்டாவென்றுகூறினார்கள். அவ்வரசன் கேட்டு நீங்கள்சொல்லும் பிராயச்சித்தம் இப்பசுவுறுநோய்க்கு மருந்தாகுமா? "மாநிலங்காவலனாவான் மன்னுயிர்காக்குங்காலைத்-தானதனுக் கிடையூறு தன்னாற்றன்பரிசனத்தா-லூனமுறுபகைத்திறத்தாற்கள்வரா லுயிர்தம்மா - லானபயமைந்துந்தீர்த்தறங்காவானல்லனோ." எனக்கூறியிப்பசுவுற்ற துயரத்தையானு முறவேண்டுமென்று ஒருமந்திரியைநோக்கி இம்மைந்தனை அவ்வீதியிலே கிடத்தித் தேர்ச்சக்கரத்தை யவன்மீதுசெலுத்துவாயென்றுகூற அம்மந்திரி அஞ்சி அவ்வாறுசெய்யாது தன்னுயிரைநீக்கினான்; உடனே "ஒரு மைந்தன்றன் குலத்துக்குள்ளானென்பது முணரான் - றருமந்தன்

வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்-பருமந்தன்றேராழியுறவூர்ந்தான்மநுவேந்த - னருமந்தவரசாட்சியரிதோமற்றெளிதோதான் " என்றபடி தன்மைந்தனைத் தானேகொண்டுசென்றுவீதியிற் கிடத்தித் தன்றேர்ச்சக்கரம் அவன்மேலே செல்லநடத்தினான். இதனைக்கண்ட " மண்ணவர்கண்மழைபொழிந்தார் வானவர்பூமழைபொழிந்தார்" சிவபிரானும் இடபாரூடராய்க் காட்சிகொடுத்தருளினார். "அந்நிலையே யுயிர்பிரிந்தவான்கன்றுமவ்வரசன் - மன்னுரிமைத் தனிக்கன்று மந்திரியுமுடனெழுந்து-மின்னபரிசானதென் றறிந்திலன் வேந்தனும் யார்க்கு-முன்னவனே முன்னின்றான் முடியாதபொருளுளதோ" என்றபடி சுங்கன்றும், அரசன்மைந்தனும், மந்திரியுமுயிர் பெற்றெழுந்தார்கள்.

சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்,

சைவநூற் பரிசோதகர்.

புத்தகக்குறிப்பு.

சிவரகசியம்:—இந்நூல் முதலிரண்டு அம்சங்களும் மூன்றாவது அம்சத்தின் முதற்பாகமும் பிர்ம்மஸ்ரீ மருவூர்-கணேசசாஸ்திரியாரவர்களால், வடமொழியினின்றும் தமிழ்நடையில் மொழிபெயர்க்கப்பெற்று, கயப்பாக்கம் ஸ்ரீமாந்-சதாசிவ செட்டியாரவர்களால் அச்சிடப்பெற்று வெளிவந்திருக்கிறது. இது சைவசமய சம்பிரதாயங்களையும்,சிவஸ்தோத்திரங்களையும், ஸ்தலாரண்ய தீர்த்தமாகாத்மியங்களையும், சிவபூசைமகிமை முதலியவற்றையும் கதைப்போக்காக யாவருமுணரும்படி யெளியநடையில் எழுதப்பெற்றிருப்பதால், சைவசமயசம்பிரதாயங்களை யறியவிரும்பும் சிவநேசச்செல்வர்களால் மிகவும் பாராட்டத்தக்கது. இதன் விலைவிவரம் வேண்டுவோர், கயப்பாக்கம் ஸ்ரீமாந்-சதாசிவ செட்டியாரவர்களுக்கு, சென்னை தங்கசாலைத்தெரு, 497-நெம்பர் சிவரகசிய மந்திரத்துக்கு எழுதிக்கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீமத்-சுந்தரமூர்த்திஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத்திருப்பதிகங்கள்:—காஞ்சீபுரம் மஹாவித்வான் ஸ்ரீமத்-இராமாநந்த யோகிகள் எழுதியபதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரைகளுடன், ஸ்ரீமாந்-பு. சண்முகமுதலியாரவர்களால் சஞ்சிகை ரூபமாக அச்சிடப்பட்டு முதலிரண்டு சஞ்சிகை வெளிவந்திருக்கின்றன. பிரிண்டிங் 32-பக்கங்கொண்ட சஞ்சிகை1-க்கு விலை அணா-2. வேண்டுவோர், ஸ்ரீமத்-பு. சண்முகமுதலியாரவர்கள், நெ. 51-ஆறுமுகம் தெரு, ஜார்ஜ்டவுண், சென்னை என்ற விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இளைஞர்தாவரநூல்:—இது, ஆல்காட்ப்ரீஸ்கூல் டிரெயினிங் வகுப்புகளுக்கு டைரெக்டராயிருந்து தற்காலம் வோரீஸ்காலேஜ் லோயர்ஸ்கூல் சூப்பர்வைசராயிருக்கும் Mr. ம. சி. இராஜா அவர்களால் எளிய தமிழ்நடையில் எழுதப்பெற்றது. இது தாவரநூலுணர்ச்

சிக்கு முதலில் வேண்டிய இன்றியமையாத விஷயங்களை இளைஞர்களுக்கு இனிது விளங்கும்படி சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி, 48-பக்கமடங்கிய சிறிய புத்தகமாக அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கிறது. இதில், 1. பிரவேசம், 2. விதைமுளைத்தல், 3. வேர், 4. அடிமரம், 5. இலை, 6. புஷ்பம், 7. கனியும்வித்தும், 8. விதைகள் ஆங்காங்குப் பரவிமுளைக்கும் விதம், 9. மற்றைமரங்களில் தோன்றிவளர்கின்ற செடிகள் முதலிய, 10. செடிகளின் வகைஎன்னும் விஷயங்கள் அடங்கியுள்ளன. இதன்விலை அணா-6.

வேதாந்ததீபிகை என்னும் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை:—இது ஸ்ரீ அஹோபிலமடத்தின் சிஷ்யசபையாரால் டிம்மிநாற்பதுபக்கமடங்கிய சஞ்சிகையாக வெளியிடப்பெற்று முதலிரண்டு சஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. தற்காலம் வெளிவராமலிருக்கும் சம்ஸ்கிருத நூல்களிலும், தமிழ்நூல்களிலும் அழுந்திக்கிடக்கும் விசிஷ்டாத்வைத மதத்தின் விசேஷதத்வார்த்தங்களை அந்யமத தூஷணமில்லாமல் வெளியிடுவது இதன்நோக்கமெனத்தெரிகிறது. இதில் விசிஷ்டாத்வைதமத சம்பந்தமான உபந்யாசங்களும், வேதாந்தார்த்த விசேஷ விசாரங்களும் புராணகதைகளும் ஆசார்யசரித்திரங்கள்முதலிய சபைக்கு வேண்டுவனபிறவும் வெளியிடப்படுகின்றன. இதற்கு விஷயப்ரதானம் செய்பவர்கள் உபயவேதாந்த பாரங்கதர்களாகவும் சாஸ்த்ரசம்பந்நர்களாகவும் காணப்படுதலால் பாரலௌகிக புருஷார்த்தங்கள் ப்ரமாணங்களைக்கொண்டு இதில் நன்கு விவகரிக்கப்படுமென்று தோன்றுகின்றது. வேண்டுமிடங்களில் சம்ஸ்கிருதவசனங்கள் கிரந்தாக்ஷரங்களால் எழுதப்பெற்றிருப்பதால் ஸம்ஸ்கிருதம்வல்லவர்களுக்கு எளிதிற் பொருள்விளங்குவதாகவும், அதுவல்லாதார்க்கு நாளடைவில் அவ்வன்மையுண்டாதற்கேதுவாகிய வாக்வல்லபத்தை யுண்டாக்கவல்லதாகவுமிருக்கிறது. இது மதசம்பந்தமான கல்வியறிவையும் ஒழுக்கத்தையும் வளர்த்தற்கு ஏதுவாயுள்ளது. இதன் வருஷசந்தா ரூ 2. தனிப்பிரதி அணா-3. வேண்டுபவர்கள் வேதாந்ததீபிகைமானேஜர், மயிலாப்பூர், சென்னை என்னும் விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்தோத்ரமஞ்சரி:—இது யாழ்ப்பாணத்து நல்லூர் உபயவேதாகமபண்டிதர் ஸ்ரீமாந்-ந. வே. கனகசபாபதி ஐயரவர்களால் தொகுக்

கப்பெற்றது. இது நித்திய நியமமாகவேனும் புண்ணியகாலங்களி லேனும் ஆலயதர்சனம் செய்யுங்கால் விநாயகக்கடவுள் முதலிய மூர்த்திகளைத் துதித்தற்குரிய தோத்திரச்செய்யுள்களைத் தொகுத்தும் சிவாலயதரிசனவிதியும், சிவபூசைக்குறுப்பாகிய சிவ புண்ணியங்களும் பிறவும் விளங்குமாறு மேற்கோள் காட்டிச் செவ்வியநடையி லெழுதியும் முடிக்கப்பெற்றிருக்கிறபடியால் சைவசமய சம்பிரதாய நித்யகர்மாநுஷ்டான விதிகளையறிய விரும்புவோர்க்கு மிகவும் பயன்படத் தக்கது.

1 மாறன்கோவை, 2. ஸ்ரீஆண்டாள்பிள்ளைத்தமிழ், 3. திருவேங்கடவுலா, 4. அழகர்கிள்ளைவிடுதூது, 5. ஆண்டாள்சந்திரகலாமாலை என்னும் இப்புத்தகங்கள் ஐந்தும் கோயம்புத்தூர் பூளைமேடு ஸ்ரீமாந்-மு. வேணுகோபாலசாமி நாயுடு அவர்களால் பிழையறப்பரிசோதித்து அச்சிற் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்துள்ளன. இவை தமிழிலக்கியங்கற்குமாணவர்களுக்குப் பயன்படத்தகுவன.

இராமாநுஜதாசர்சரிதை:—இது 1028-செய்யுளடங்கிய 18-சருக்கங்களாக அரியக்குடி,சா. கி. அரங்கநாதச்செட்டியாரால் இயற்றப்பட்டு ௸யார் குமாரர் ஸ்ரீமாந்-சா. கி. ரெ. இலக்குமணச்செட்டியாரவர்களால் பதிப்பிக்கப்பெற்று வெளிவந்திருக்கிறது. இதனுல் சரித்திரநாயகராகிய ராமாநுஜதாசர் வைஷ்ணவசமய சம்பிரதாயப்படியொழுகி நற்கதியடைந்தாரென்பதும் வேண்டும்பிறவும் சொல்லப்பட்டிருக்கின்றன.

சித்தாந்தசிகாமணி:—இது வீரசைவசித்தாந்த மினிதுவிளங்குமாறு துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளால் வடமொழியினின்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இதற்கு அச்சமயவுண்மைகளை நன்குணர்ந்த ஸ்ரீமாந்-செ. நாகிசெட்டியாரவர்களா லெழுதப்பெற்ற பதவுரை விசேடவுரைகளுடன் விஷயசூசனம் சிவப்பிரகாசசுவாமிகள் வரலாறுமுதலிய பிறவும்சேர்த்து நன்குபதிப்பிக்கப்பட்டு வெளிவந்திருக்கிறது. இது வீரசைவ சித்தாந்த தத்வார்த்தங்களைப்பற்றியறிய விரும்புவோர்க்கு மிகவும் பயன்படத்தக்கது. இதன்விலை ரூ 2.

பத்திராதிபர்.

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

இச்சங்கத்தார் 1911-ஹூ சாதாரண ஹூ தைமீ 10, 11, 12-தேதிகளில் நடாத்திய தனித்தமிழ்ப் பரீட்சைகளில் தேறிப் பரிசும், யோக்கியதா பத்திரமும் பெறும் மாணுக்கர்களின் விவரம்.

பிரவேசபண்டித பரீக்ஷை.

II-வது வகுப்பு.

1\. 1. K. இராமானுஜையங்கார், சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை மதுரை.

2\. 5. சே. ரா. திம்மப்பையர், சமயசங்கிலிகிராமம், சேலம்.

3\. 2. K. S. வெங்கட்டராவ், சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை மதுரை.

4\. 3. வி. சிங்காரவேலங்காரயர், இளங்காடு, தஞ்சை.

உ

பாண்டியம்.

முகவுரை.

உலகில்வழங்கும் பலபல பாஷைகளிலும் எழுத்துக்கள் ஒலிவடிவிற் பெரும்பான்மை ஒற்றுமையுடையனவாயிருந்தும் வரிவடிவில் வேறுபட்டு வழங்கப்படுகின்றன. பண்டைக்காலத்தில் ஒவ்வொருபாஷையும் ஒவ்வொருதேசத்துள்ளேயே வழங்கிவந்தபடியால் ஒவ்வொருதேசத்தாரும் அவரவர் பாஷைக்குரிய ஒலியெழுத்துக்கு வேறுவேறு வரிவடிவு கற்பித்துக்கொண்டு அவரவர்க்குரிய பாஷையையே பெரும்பாலும்பயின்று நூல்களுமியற்றிப் போந்தனர்.

பின்பு அறிவுவளர்ச்சிக்குரிய அரியபெரிய பலபலவிஷயங்களை நூல்களினமைக்கப்பெற்ற வடமொழியானது வழக்கின்கணின்றிப் பொதுமொழியாகி எங்கும்பரவத்தலைப்படவே அதனை ஒலிவேறுபாடில்லாத தெலுங்குமுதலிய பாஷைகளைப் பயில்பவர்கள் அவரவர் பாஷைக்குரிய எழுத்துக்களால் எழுதிப்பயில்வாராயினர். தமிழ்முதலிய ஒலிவேறுபாடுள்ள பாஷையுடையவர்கள் அதற்குத் தம் பாஷைக்குரியவரிவடிவெழுத்தோடொத்த ஒருவகை வரிவடிவெழுத்து அமைத்துக்கொண்டு எழுதிப்படித்து வந்தனர்.

பின்பு எழுத்துக்களுக்கு அச்சியந்திரங்களமையவே சிற்சில வடநூல்கள் தமிழர்பயிலும் வடவெழுத்தில் அச்சிடப்பட்டனவாயினும் அவை தமிழ்நாட்டிலுள்ள சிறுபாலார்க்கே பயன்படுதலல்லது பிறநாடுகளிலுமுள்ள மற்றையோர்க்குப் பயன்படவில்லை. இவ்வாறே சில அரியபெரிய வடநூல்கள் தேவநாகரலிபியிலும், தெலுங்கு முதலிய லிபியிலும் அச்சிடப்பட்டன. அவை தேசபாஷாலிபியானமையால் அவ்வந்நாட்டார் பலர்க்கும் பயன்படுதலால் அப்புத்தகங்கள் மிகப்பதிக்கப்பட்டு விலைகுறைத்து விற்கப்பட்டன. அப்புத்தகங்களையும் வாங்கிப்படிக்கக்கருதிய தமிழ்நாட்டார் தமக்க

மைந்த இருவகை லிபியுடன் தெலுங்கு, தேவநாகரம் என்னும் இரு வகை லிபியும் கற்கத்தலைப்பட்டார்கள்.

இவற்றோடு அமையாது, இக்காலத்து உலகவழக்குக்கு ஆங்கில பாஷையின்றியமையாததாகவே அதற்குரிய கையெழுத்து, அச்செழுத்து, சிற்றெழுத்து பேரெழுத்துஎன்னும் எழுத்துவகைகளையும் பயின்று வருகின்றனர்.

ஆதலால் நம் தமிழ்நாட்டிளைஞர்கள் அறிஞராகவேண்டிக்கற்கத்தகும்பாஷைகள்மூன்றிலும் பழகவேண்டிய வரிவடிவெழுத்துக்கள் பலவகையாகின்றன.

இவற்றைக் கற்கவிரும்புவோர் நுண்ணறிவுடையராயினும் சற்றேறத்தாழ அவர்க்கு இரண்டுவருடகாலம் கழிந்துவிடுகின்றது.

வரிவடிவெழுத்தின் விஷயமாக இவைபோலுமின்னும் பலபல இடர்ப்பாடுகளுள்ளனவற்றையுணர்ந்து உலகத்திலுள்ள பாஷைகளெல்லாம் ஒருவகைவரிவடிவெழுத்தாலேயே யெழுதவும் படிக்கவும் நேர்ந்தால் நன்மையாகுமென்று கருதி, அதற்கான சிலமுறைகளைக் கைப்பற்றிப் பயின்று முடிவுசெய்துகொண்டிருந்த எனக்கு 1911-ஆம் ஜனவரிமீ 15உ வெளிவந்த பூர்ணசந்திரோதயம் என்னும் பத்திரிகை கிடைத்தது. அதனை வழக்கம்போற்படித்து வருகையில் ஹிந்தியா தேசமுழுதும் ஒரே பாஷையும் ஒரே லிபியும் இருக்கற்பாலது என்னும் தலையங்கத்தின் 4-ஆவது பத்தியில் "ஏகலிபிவிஸ்தாரபரிஷத்" என்றுபெயருள்ள ஒருசமாஜம் கல்க்கத்தாவில்சென்ற" "ஐந்துவருஷமாக நடைபெற்று வருகின்றது; அதன் முக்கியமான" "நோக்கம் என்னவென்றால், ஒரே எழுத்தில் தேசத்தில் வழங்கு" "கின்றபலபாஷைகளும் எழுதப்படவேண்டுமென்பதாம். அதனு" "டன்தேசமுழுவதும் ஒரேபாஷை பேசப்பட்டுவரவேண்டுமென்று" "நினைக்குங்கருத்துப் பொருத்தமாகவிருக்கிறது. நம்தேசத்திலுள்" "ளவித்வான்களும் அறிஞர்களும் தாங்கள் கற்கும் பலபாஷைகளு" "டன் ஹிந்திபாஷையையும் கற்கவேண்டுமென்று சங்கற்பங்கொள்" "வார்களாகில் நாமிப்போது கொள்ளுங்கருத்துச் சீக்கிரம் சித்திபெ" "றும்" (என்றும்) "எழுத்தின் உருவத்தைப்பற்றித் துரபிமானங்"

"கொள்ளாமல் தேவநாகர எழுத்தை அநுஷ்டிக்கும்படியாகத்"
"தமிழ்ச்சங்க முதலான சபையார்கள் முயற்சிப்பாராகில் அந்த"
"அநுஷ்டானம் சாத்தியமாகுமென்றுமதிக்கிறோம்." என்றும் கண்டு, ஹிந்திபாஷையை ஹிந்தியாமுழுமைக்கும் பொதுப்பாஷையாக அமைத்துக்கொள்ள முயலவேண்டும் என்னும் நோக்கம் வெளியிடப்பட்டிருப்பதை யுணர்ந்தேன். இந்த நோக்கம் காலகதியால் முற்றுப்பெறுவதானாலும் முற்றுப்பெறாதுபோனாலும் ஏகலிபியமைப்புப் பயன்படத்தக்கதென்று தோன்றுகின்றது.

ஏனெனில், தனித்தமிழ்நூல்களொழிந்த வடமொழிகலந்த மணிப்பிரவாளநடையாலாகிய திவ்வியப்பிரபந்த வியாக்கியான முதலிய பல சிறந்தநூல்களும் ஜைனமதநூல்களும் தனித்தமிழெழுத்தால் எழுதவும் படிக்கவும் அச்சிடவு மியலாமையால் தென்னாட்டு வடவெழுத்தேனும், தெலுங்கெழுத்தேனும் துணையாக வேண்டப்பெற்றிருக்கின்றது.

அவ்வாறே, அவைதனித்தெலுங்கெழுத்தாலாயினும் பிறவெழுத்தாலாயினும் வழங்கக்கருதியவிடத்து ற ன ழ வருக்கமுதலியன அவற்றுள் இல்லாமையால் அவை இத்தமிழெழுத்துக்களையே துணையாகக்கொண்டு அச்சிடப்பெற்று வெளிவருகின்றன. அன்றியும் ஆங்கிலமொழிவிரவிய தேசபாஷையிலுள்ள சட்டப்புத்தகங்கள்முதலிய அரசியல்நடைகளும் ஆங்கிலவெழுத்துதவியை வேண்டுகின்றன. இதுபற்றியே "எப்" என்னுமெழுத்துத் தமிழிற் புதிதாய் ஒன்று அமைத்துக்கொள்ளவேண்டுமென்று ஒரு நண்பர் எழுதிய வியாசம் ஒன்று சுதேசமித்திரனில் வெளிவந்திருக்கிறது.

அன்றியும், பாஷாந்தரங்களிலிருந்து அரிய நூல்களைத் தமிழ்நடையில் மொழிபெயர்க்குமிடத்து அவ்வந்நூல்களிற் பயிலும் குழூஉக்குறிப்பெயர்களை அப்படியே யெழுதவேண்டுமெழுத்துக்கள் இல்லாமையால் அவற்றை மொழிபெயர்த்து எழுதுவோரும் அச்சிடுவோரும் இடர்ப்பட்டு அவ்வப்பாஷையெழுத்துக்களை யுபயோகிக்கின்றனர். ஆகையால் இக்குறைகணீக்கி எல்லாமொழிகளையும் இடரின்றி எழுதவல்ல ஏகலிபி ஒன்றிருப்பது நலமேயாம்.

அதற்குத் தேவநாகர லிபியை விரும்புவோமாயின் இத்தகைய குறைவுபாடு அதற்கும் உள்ளனவாம். தேவநாகர எழுத்துக்களுடன் பிறதேசபாஷைச்சிறப்பெழுத்துக்களைமட்டும் சேர்த்துக்கொண்டு பொதுலிபியாகக் கொள்ளக்கருதின் மற்ற லிபிகளைவிட எழுத்துப்பெருக்கமுள்ளதாய்விடுமாதலாலும், அவ்வெழுத்துக்கள் வெகு முயற்சியுடையனவாயிருத்தலாலும், பிறபாஷாலிபிகளுடன் முறை பிறழ்தலுடையவாமாகலாலும் ஏகலிபியாதற்கிடமின்மையால் உலகத்தார் அதனை எளிதிற்கொள்ளுதலரிதாகும். ஆதலால் பிறிதாகவே யொரு புதுலிபியமைத்துக்கொள்வது தகுதியுடையதென்று தோன்றுகின்றது.

புதுலிபியமைப்பால் தேசபாஷாலிபிகளைத் தற்காலம் கைவிடுதல் சாத்தியமாகமாட்டாது. தேசபாஷாலிபியொன்றிருக்கும்போது புதுலிபியை உலகத்தார் கற்கத்தொடங்கல்சாத்தியமாகுமாவென்று கேட்கலாம். தொழில் செய்பவர்களுக்கு வேண்டும்கருவிகள் தம்மிடம் நிறைந்திருப்பினும் அவற்றினு மிக்க சௌகரியமுள்ள கருவி கிடைக்குமாயின் அதனையும் விரும்புகிறார்கள். உதாரணமாக வண்டி, குதிரை முதலிய வாகனங்களுள்ளவர்களும், பைசைக்கிள்களையும், மோட்டார்வண்டிகளையும் வாங்கி யுபயோகிக்கக் காண்கிறோம். அது போலத் தேசபாஷை எழுத்துக்களைப்பார்க்கிலும் சுலபமாக எழுதப் படிக்கத்தெரிந்துகொள்ளும்படி புதுலிபியையமைத்தால் அது ஆங்கிலக்கையெழுத்துப்போலத் தற்காலம் தேசபாஷா லிபியோடு துணை லிபியாக உலகிற்பயன்படுமென்பதிற் சந்தேகமில்லை. இவ்விஷயத்தில் ஏகலிபி விஸ்தாரபரிஷத்தும் பலஅறிஞர்களும் இணக்கமுள்ள அபிப்பிராயத்துடனிருப்பதாகத் தெரிந்தபடியால் அவர்களும் மற்றுமெல்லோ நம் ஆதரிக்கும்படி எழுத்துக்களைச் சுலபமாக்கவேண்டு மியல்புகளை யாராய்ந்து, தேசபாஷாலிபிகளின் சாயையுடையதாயும், சிறுமுயற்சியிலெழுதுவதாயும், எழுதுகோல்முனை வலப்புறம் நிற்க முடிவதாயும் ஒலிவடிவெழுத்துக்களோடொப்புமையுடையதாயும், சிறுவர்களும் மிக எளிதிற்கற்கத்தக்கதாயும், கற்பவர் சில எழுத்துக்களைத் தெரிந்தஅளவிலே மற்றை எழுத்துக்களையும் தாமே தெரிந்துகொள்ளத்தக்க யுக்தியோடு கூடியதாயும், பலபல பாஷைகளிலும் எழுதவல்லதாயும், எழுத்தெழுதும் இடத்திலும் காலத்தி

லும் சுருக்கமுள்ளதாயும், அச்செழுத்துப் பெட்டிக்குச்சில அறையு ளடங்குவதாயும், அச்சுக்குவிரைவிற் சேர்க்கத்தக்கதாயும், டைப் ரைட்டிங் எந்திரத்துக்குச் சுலபமாக உபயோகப்படுவதாயும், உயிர் மெய்யெழுத்து வரிகளேயன்றி க்க, ங்ங, ச்ச, ண்ண முதலிய தன்னொ ற்றிரண்டிணைந்த உயிர்மெய்யெழுத்துக்களையும் ங்க, ஞ்ச, ண்ட முத லிய இனமெலிமெய்தொடர்ந்த உயிர்மெய்யெழுத்துக்களையும் அவற் றோடு ஒற்றடுத்துவருவனவற்றையும் பிறமெய்தொடர்ந்து வருவன வற்றையும் ஓரெழுத்தாகக்கூட்டியெழுதற்கேற்ற முறையுடையதா யும், அக்ஷரதத்வங்களைத் தழுவியதாயும் ஒருவகைப் புதுலிபி என்னா லமைக்கப்பெற்றிருக்கிறது.

இது, பாலவனத்தம் ஜமீந்தாரும், மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தா பகரும் அதன் அக்கிராசனருமான ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரை யவர்களின் பேருபகாரத்தால் முடிக்கப்பெற்றமையால் இதற்கு அவர்கள் பெயரால் பாண்டியமென்று பெயர்கொடுக்கப்பெற்றிருக் கிறது.

இதன் ஒவ்வோரெழுத்தும் தெரிந்துகொள்ளும்படி தமிழ் முத லிய எழுத்துக்களைக் கீழே கொடுத்துக்காட்டியும், இதிலடங்காத எழுத்துக்களைக்கற்பித்துஎழுதிக்கொள்ளும்முறையும் பிறவும் அறிந் துகொள்ளும்படி விவரணமெழுதியும் இதனை வெளியிட்டிருக்கிறேன்.

இதனை அறிஞர்களும் அந்நியபாஷாநிபுணர்களும் கண்ணுற்று இன்னும் சேர்க்கவேண்டிய எழுத்துக்கள் இருந்தால் அவற்றையும் இம்முறையாகச் சேர்க்கும்படி எனக்கு அறிவிக்குமாறு வேண்டிக் கொள்வதுடன் அவ்வாறு செய்பவர்களுக்கு மிக்க நன்றிபாராட்ட வும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்ஙனம்,

திரு. நாராயணையங்கார்.



அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ



க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ க்



ச சா சி சீ சு சூ செ சே சை சொ சோ சௌ ச்



ஞ ஞா ஞி ஞீ ஞு ஞூ ஞெ ஞே ஞை ஞொ ஞோ ஞௌ ஞ்



ட டா டி டீ டு டூ டெ டே டை டொ டோ டௌ ட்



ண ணா ணி ணீ ணு ணூ ணெ ணே ணை ணொ ணோ ணௌ ண்



த தா தி தீ து தூ தெ தே தை தொ தோ தௌ த்

ந நா நி நீ நு நூ நெ நே நை நொ நோ நௌ ந்



ப பா பி பீ பு பூ பெ பே பை பொ போ பௌ ப்



ம மா மி மீ மு மூ மெ மே மை மொ மோ மௌ ம்



ய யா யி யீ யு யூ யெ யே யை யொ யோ யௌ ய்

ர ரா ரி ரீ ரு ரூ ரெ ரே ரை ரொ ரோ ரௌ ர்



ல லா லி லீ லு லூ லெ லே லை லொ லோ லௌ ல்



வ வா வி வீ வு வூ வெ வே வை வொ வோ வௌ வ்



ழ ழா ழி ழீ ழு ழூ ழெ ழே ழை ழொ ழோ ழௌ ழ்



ள ளா ளி ளீ ளு ளூ ளெ ளே ளை ளொ ளோ ளௌ ள்



ற றா றி றீ று றூ றெ றே றை றொ றோ றௌ ற்



ன னா னி னீ னு னூ னெ னே னை னொ னோ னௌ ன்



ஜ ஜா ஜி ஜீ ஜு ஜூ ஜெ ஜே ஜை ஜொ ஜோ ஜௌ ஜ்

ஷ ஷா ஷி ஷீ ஷு ஷூ ஷெ ஷே ஷை ஷொ ஷோ ஷௌ ஷ்



ஸ ஸா ஸி ஸீ ஸு ஸூ ஸெ ஸே ஸை ஸொ ஸோ ஸௌ ஸ்



ஹ ஹா ஹி ஹீ ஹு ஹூ ஹெ ஹே ஹை ஹொ ஹோ ஹௌ ஹ்

க்க க்கா க்கி க்கீ க்கு க்கூ க்கெ க்கே க்கை க்கொ க்கோ க்கௌ F



ங்க ங்கா ங்கி ங்கீ ங்கு ங்கூ ங்கெ ங்கே ங்கை ங்கொ ங்கோ ங்கௌ ங்



விவரணம்.

இப்பாண்டியம் பழகவிரும்புவோர் இவ்வெழுத்துக்களுள் முதல் வரியிலுள்ள உயிரெழுத்துக்களையும் வரிதோறும் கடைசியிலுள்ள மெய்யெழுத்துக்களையும் முதலிற்றெரிந்துகொள்ளவேண்டும்.

ஒவ்வோரெழுத்துக்கும் தொடங்கப்படும் இடப்பக்கம் அடியாகவும், முடிக்கப்படும் வலப்பக்கம் முடியாகவும் குறுக்குவரை யுடலாகவும் கருதவேண்டும். எழுத்துக்கள்தோறுமுள்ள குறுக்குவரையைக் கீழ்மேல் சாயாது வரிகடவிற் சமமாகவைத்தெழுதவேண்டும்; அது தனித்துநிற்பின் அகரமும் முனையின்கீழ்ச் சிறுபுள்ளியொட்

டப்பெறின் ஆகாரமும் ஆம். மற்றையுயிர்களுக்குக் கோடுகொடுக்கப்படும். கோடென்பதுபிறைவடிவாக வளைத்தெழுதப்படும் வரையாம்.

இ ஈ எ ஏ ஐ யென்னும் எழுத்துக்கள் குறுக்குவரையின் மேற்கோடும் உ ஊ ஒ ஓ ஔ என்னும் எழுத்துக்கள் குறுக்குவரையின் கீழ்க்கோடும் கொடுக்கப்பெறும். அவற்றுள் குற்றெழுத்துக்களுக்குக் குறுங்கோடும் நெட்டெழுத்துக்களுக்கு நெடுங்கோடும் கொடுக்கவேண்டும். குறுங்கோடு குறுக்குவரையின் எல்லையுள் அடங்கியிருக்கவேண்டும். நெடுங்கோடு குறுச்குவரை எல்லையைமறித்து நீண்டிருக்கவேண்டும். இ ஈ உ ஊ என்னுமெழுத்துக்களுக்கு குறுக்குவரையினிடையிற் கோடுதொடங்கவேண்டும். மற்ற எகரமுதலிய வுயிரெழுத்துக்களுக்குக் குறுக்குவரையின் முனையிற் கோடுதொடங்கவேண்டும். ஐகார ஔகாரங்களின் கோட்டுமுனை முறையே யிடச்சுழியும் வலச்சுழியும்பெறறு எகர ஒகரங்களில் வேறுபட்டிருக்கவேண்டும். இவ்வாறுள்ள உயிர்வருக்கத்தின் உருவத்தை முதல்வரியிற் கண்டுகொள்க.

க், முதலிய மெய்யெழுத்துக்களையெல்லாம் அவற்றின உயிர்மெய்வரியிறுதியிற்காட்டியவாறு கண்டெழுதிக்கொள்க.

வேண்டும் மெய்யெழுத்தொன்றை முன்னெழுதி அதன்பின் யாதேனுமோருயிரெழுத்தை யொட்டியெழுத அவை அவற்றுலாகிய உயிர்மெய்யெழுத்தாம். அவற்றை உயிர்மெய்வரிகளிற் கண்டு அவ்வாறே காட்டாதொழிந்த வுயிர்மெய்யெழுத்துக்களையும் கற்பித்தெழுதிக்கொள்க.

சுழிதனித்து நிற்பின் ஆய்தவெழுத்துக்கு அறிகுறியாம். அதன்பின் உயிரெழுத்துக்களை யொட்டின் வடமொழிச்சிறப்பெழுத்தாகிய ஹகார உயிர்மெய் வரியாகுமாறு காட்டப்பட்டிருக்கிறது. மற்றும் ஸகாரஷகார முதலிய சிறப்பெழுத்துக்களும் காட்டப்பட்டவாறு கண்டுகொள்க.

இனிவடமொழி வர்க்கபஞ்சகத்தின் சிறப்பெழுத்துக்களைத்தெரிந்து எழுதிக்கொள்ளுமாறு க ச ட த ப க்களின் தொடக்கத்தில் நிலைவரையாகியகால் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனை இடப்பு

றம் சாய்த்தெழுத அவற்றின் முதலெழுத்தாகவும், அவ்வாறு சாய்த்து அக்காலைச் சிறிது நீட்டியெழுத அவற்றின் இரண்டாமெழுத்தாகவும், அக்காலை வலப்புறம் சாய்த்தெழுத மூன்றாமெழுத்தாகவும் அவ்வாறு(வலப்புறம்)சாய்த்தகாலைச்சிறிது நீட்டியெழுத அவற்றின் நான்காமெழுத்தாகவும் பாவிக்கவேண்டும். இவ்வியல்பு ஜகாரவரியினமைந்திருப்பதுகண்டு மற்றை எழுத்துக்களையும் எழுதிக்கொள்க.

மேலேகாட்டிய கசடதப வரிகளிற் றொடக்கத்தில் எழுதும் காலை இடம் சாயாது செவ்வே நிறுத்தியது, “சாகாடுபுதிது” என்னும் சொற்றொடரிற்போல உரப்பலெழுப்பலின்றி யிடைநிகரா யொலிக்கும் கசடதபக்களைக் குறிப்பதற்கென்று கண்டுகொள்க.

இவற்றுளடங்காத தெலுங்கிலுள்ள சகரவர்க்க விசேடங்களிரண்டற்கும் மூன்றாவது நான்காவது சகரங்களின் உடலைச் சிறிது நீட்டி எழுதி வேறுபடுத்திக்கொள்க.

வடமொழி எழுத்தில் முப்பதாம் மெய்யாகிய ஹகாரத்துக்கு இதிற் சகரவரிக்குக்காட்டியதையே அறிகுறியாகக்கொள்க.

வடமொழி உயிர்வரியினிடைநின்ற ஐ ஐ ஊ ஊ என்னும் நான்கு சிறப்பெழுத்துக்களில் முதலாவதற்கு வடமொழியுயிர்மெய் வரியில்வரும் அதன் குறிபோலவே ȷ இவ்வாறு குறுக்குவரைக்குக் கீழிடையிற் றொடங்கி இடப்புறம் நோக்கிய கோடு கொடுக்க.

இரண்டாவதற்கு ȷ இவ்வாறு அக்கோட்டின் முனையிற் சுழி கொடுக்க. மூன்றாவதற்கு ȷ இவ்வாறு குறுக்குவரையின் முனையிற் றொடங்கியகோடுகொடுக்க. நான்காவதற்கு ȷ இவ்வாறு அக்கோட்டின்முனையிற் சுழிகொடுக்க. இவற்றை மெய்யெழுத்துக்களின் பின் ஒட்டிஎழுதி அவை அவற்றுடன் கூடிய உயிர்மெய்யெழுத்துக்களாமாறுகண்டுகொள்க.

ஙகரவரிஉயிர் மெய்யெழுத்துக்கள் வழக்கில் அருகியவாதலால் அவற்றை வரியினமைத்துக் காட்டாது “ங்க” வரியினிறுதியில் ஙகர வொற்றுமட்டும் காட்டப்பட்டிருக்கிறது. அதனுடன் உயிர்க்குறிகளையொட்டி ஙகர வுயிர்மெய்வரியையும் தன்னெற்றிணையுயிர்மெய்க் குறியையொட்டி ‘ங்ங’ வரியையுமெழுதிக்கொள்க.

க்கவரியினிறுதியில் + இவ்வாறுவைக்கப்பட்டது ஆங்கிலச்சிறப்பெழுத்தாகிய(F)எப் என்பதாம். அதனுடனும் உயிர்க்குறிகளையொட்டி அதன்உயிர்மெய்வரி எழுதிக்கொள்க.

ககர முதலிய மெய்யெழுத்துக்கள் கால் ஒன்று கூட்டியெழுதப்பெறின் க்க, ங்ங, ய்ய, முதலிய தன்மெய்யிணையுயிர்மெய்யென்னும் கூட்டெழுத்தாம். அக்கால் அகரமேறிய தன்மெய்யிணையுயிர்மெய்யெழுத்துக்கு ஈற்றிலெழுதவேண்டும். இகர முதலிய உயிரேறிய அவ்வெழுத்துக்கு அவ்வவ்வுயிர்க்குறிக்கெதிர்ப்புறம் தொடங்கியொட்டி எழுதவேண்டும்; இதனைக்க வ்வரியிற்கண்டு அவ்வாறு ங்ங வரி முதலிய பிறவுமெழுதிக்கொள்க.

அவ்வாறே சிறியசுழிகொடுத் தெழுதப்பெறின் இனமென்றொடர் உயிர்மெய்யென்னும் கூட்டெழுத்தாம். இதனை ங்க வரியிற் காட்டப்பட்டவாறு கண்டுகொள்க. மற்றும் இவ்வாறே ஞ்ச, ண்ட, ந்த, ம்ப, ன்ற என்னும் இனமென்றொடர் உயிர்மெய்வரி எழுதிக்கொள்க.

இனிச்சிறுகால், சிறுபுள்ளி, சிறுவிலங்கு என்பனவற்றை எழுத்துக்களின் மேலும் கீழும் முதல், இடை, கடையென்னும் ஆறிடங்களிலும் இட அவை முறையே கசடதபற, ஙஞணநமன, யரலவழள என்னும் மெய்யீற்றுக் கூட்டெழுத்துக்களாம். இவ்வெழுத்துக்களுந்தெரிந்துகொண்டால் வாழ்ந்தோர் என எட்டெழுத்தால் எழுதப்படுஞ் சொல் "வாழ்" என ஓரெழுத்தும் "ந்தோர்" என ஓரெழுத்துமாக இரண்டெழுத்தால் எழுதப்படும். கொக்கு, காக்கை, கோங்கு, வேங்கை என ஐந்து எழுத்தால் எழுதப்படுஞ்சொற்கள் இரண்டெழுத்தால் எழுதப்படும் என்பதை அவற்றிற்கு வேண்டுமுயிர்மெய்யெழுத்தைக்கொண்டெழுதிக் கண்டுகொள்க.

மற்றைய கூட்டெழுத்துக்களும் பிறவும் இவ்வெழுத்துக்களுக்கு அச்சமைத்துச் சொற்றொடருடன் புத்தகமாக வெளியிடும்போது விரித்தெழுதப்பெறும்.

திரு. நாராயணைங்கார்.

உ

திருச்சிற்றம்பலம்.

உவமானசங்கிரகம்.

விநாயக வணக்கம்

புவனமிசை மாதர் பொருந்தவய வங்கட்
குவமான சங்கிரக மோதக்—கவுளடிக்கட்
சிந்து மதவருவிச் செங்கட் புகர்வதனத்
தைந்துகரத் தான்காவ லாம். (௧)

நூல்.

உள்ளங்காற்கும், விரலுக்கும் உவமானம்.

வனச மலர்மாந் தளிர்முயலின் வயிறுசெயலை யனத்தூவி
சுனக னுக்குச் செம்பஞ்சு துகடீ ரனிச்ச மிவை மடவார்
வினவுன் ளடிநேர் பெருங்காலின் விரல்க டமக்கு மஞ்சண்முளை
யனைய வென்பர் துவருமிணை யாமென் றுவந்து சொல்வாரே. (௨)

கால்விரனகத்திற்கும், புறங்காலுக்கும், கரட்டிற்கும்.

காலின் விரல்சே ருகிர்படிகங் கண்பத் தாகக் கடைந்தமதி
சாலும் புறங்கால் கமடமும்புத் தகமுங் கமுகம் பாளையுமாம்
பாலின் பாளை யுட்குரும்பை பந்து தராசு சிப்பியிவை
நாலுங் காட்டுக் குவமையென நவில்வ ரியனூற் கவிவலரே. (௩.)

குதிக்கும், கணைக்காற்கும்.

பாவு சிறுதூ ரிசைப்பெட்டி பந்து சங்கு வனசமுகி
ழிரச நறுமாங் கனிகுதிக்கா லேய்க்கு முவமை பெறுந்தூணி
விரவு தேன்பூ விரிபாளை வேணு காளம் வராலேந்து
முரவுக் கணைக்கா லுக்கிணங்கு முவமை யாமென் றுரைப்பாரே. (௪)

முழங்காற்கும், தொடைக்கும்.

அலவன் பசுமூக் குற்றதிற லாலான் பணிகே டகத்தின்குமிழ்
சொலுநன்முழந்தாட் குவமையெனச் சொலுவர்தொடைக்கானைத் துதிக்கை
சலமி லீனு விளங்கதலித் தண்டா மல்குற் றடநீந்தக்
குலவு தெப்பந் துணையெனவுங் குறிப்ப ருவமை நெறியெனவே. (௫)

அல்குற்கும், பெண்குறிக்கும்.

பொற்றட் டனங்க ளரமனைவேள் பொக்கிசங்காக்கணம்பூப்பைந்
தெற்றுந் தேன்கூ டாவபடஞ் செந்தாமரைப்பூ மதுக்குழலாம்
பற்றும் வாழைப் பூமலிபொற் பதக்கங் குதிரைச் செவிதேர்த்தட்
டொற்ற வமுத சர்க்கரைகூ ருடும்பின் வாய்நற் றேன்கிணறு. (௬)

அடருஞ் சத்தி பீடமத னால வட்டங் குளமடைபாற்
கடறா விளக்குச் சங்கநிதி கவிழு ரிளவெற் றிலைவிண்ணிற்
படரு மாசி னிலைபட்டம் பகரு மல்கு றனக்கிசையத்
தொடருமுவமைபெண்குறிக்குச்சொல்லத்தகுமான்குளம்பென்றே. (௭)

இடைக்கும், வயிற்றுமடிப்பிற்கும், வயிற்றிற்கும்.

கொடிநூல் துரும்பு தேய்ந்தபிறைக் கொழுந்து சிங்க மதனுருவந்
துடிவின் மின்னைப் பிடிகுலிசந் துலங்கு மாவு மிடைக்கொப்பாம்
படிநீர்த் திரைபோ லவுமடிப்புப் பயிலும் வயிற்றுக் காலிலையுங்
கடிசேம் பிலையு மதிப்பிளவுங் கதலிக் குருத்து மிணையாமே. (௮)

உந்திக்கும், வயிற்றுரோமத்தொழுங்கிற்கும்.

வட்டச் சோகி மல்லிகைப்பூ வருநீர்ச் சுழிநந் தியாவட்ட
மொட்டென் றுவமை யுந்திக்கு மொழிவர் சலாகை வார்க்கயிறு
துட்ட மதன ஞெணுழுக்கர் தும்பித் துதிக்கை யெறும்பொழுக்கம்
விட்ட கரிய மணிக்கோவை வேழத் திழியு மததாரை. (௯)

விரும்பா லிலையி னடுநரம்பு விண்டு கிடத்த லிரதவடங்
கரும்பா மிளநீர்க் காம்புநறுங் களபத் தின்றண் டுளித்தாரை
யரும்பார் வனசப் பூம்பசுந்தா ளவிர்வான் றுறை யென்றிசைய
வரும்பே ருவமை பெறுமடிப்பின் வயிற்று ரோமத் தொழுங்கினுக்கே. (௧௦)

தனத்திற்கு.

வல்லுச் சக்கிர வாகமதன் மகுட மெலுமிச் சங்கனிபூண்
வில்வக் கனிமாங் கனிதேங்காய் விளவின் கனிகோ புரத்தூவி
சொல்வெற் பிளநீர் கதலிப்பூச் சொர்ணத் தாளஞ் சிவலிங்கந்
தெல்லுக் காகங் கோங்கரும்பு சிமிழ்பம் பரம்பொற் குடங்கிண்ணம். (௧௧)

செண்டு குமிழ்வார் கூடாரஞ் சேவின் சிமிழ்பொற் காண்டகமென்
புண்ட ரீக முகிழ்பந்து புன்னைக் காய்மா துளங்கனிமேற்
கொண்ட மொக்குள் பிடிசெம்பு கொட்டைப் பாக்குப் பருதிமதி
மிண்டு தீபமத் தகமருப்பு மெழுகி னுருண்டை பசும்பொற்றேர். (௧௨)

படர்ந்த செப்பு மாவிலிங்கம் பழமா றேழு மிணைந்திருமாந்
தடர்ந்து விம்மிச் சுணங்கரும்பி யண்ணாந் திளகிப் பணைத்தெழுந்து
தொடர்ந்து களப மொழுகநறுந் தொய்யி லிலங்க வெண்டாள
வடங்கொள் புளக முலைக்கிசைய வழுத்து முவமைச் சிறப்பாமே. (கங)

வீறத்தும், நகத்திற்தும்.

அலரிக் காய்முத் திரைக்கோல்பொன் னாழி துலங்கும் பயற்றங்காய்
குலவப் படமோந் தளிர்பவளக் கொம்பு கெளிறு கிட்டிக்கோ
ணிலவச் சுழற்றுந் திறவுகோல் நேரு மிருகை விரற்குவமை
கலவப் பெறுமவ் விரலுகிர்க்குக் கருதுங் கிளிமூக் கொப்பாமே. (கச)

வுங்கைக்தும், தோளுக்தும்.

தளஞ்சேர் செந்தா மரைகாந்த டயங்கு முச்சி திலதமென
வளஞ்சே ரங்கை பெறுமுவமை மானு முன்கை யாழ்க்கோடு
விளங்கு மெழிற்பூ ரணகும்ப மிசையே தரித்த மாலிகைவேய்
கிளர்ந்த மலர்ப்பஞ் சணைமூன்றுங் கிளரு மென்றோட் கிணையாமே. (கரு)

கழுத்திற்தும், முகத்திற்தும், வெயர்விற்தும்.

சங்கு செம்பு பாலிகைபூ சனிப்பூச் சூல்கொ ளிளங்கமுகு
மங்க லஞ்சேர் சுருளேந்து மடலுங் கழுத்துக் குவமைபெறுந்
திங்கள் படிமக் கலங்கமலஞ் செண்டு பூத்தட் டிவைதாணி
யெங்கும் புகழுந் திருமுகத்துக் கிசையு முத்தம் வெயர்வாமே. (கசு)

இதழுக்தும், வாய்க்தும்.

கொண்ட பவள முருக்கிந்த்ர கோப மிலவு செம்பரத்தந்
தொண்டை வீழி யமுத தண்டஞ் சொற்க பாட மாதுளம்பூ
வண்டு சவியுஞ் செழுங்குமுத மலர்து ளைசெங் கமலமொப்புக்
கண்டு மொழிந்தா ரிதழ்க்குங் கனிவா யினுக்கு மிணையாமே. (கஎ)

பல்லுக்தும், நகைக்தும்.

முத்துத் தளவு புன்கரும்பு முருந்து மாது ளங்கனியின்
வித்துப் பதும ராகமுணா விரும்பு மெயிறு தகும்பரிவி
னத்துத் தரள நகைக்குவமை நகுவெண் ணிலவா மெயிறுசற்றே
யொத்துச் சிவந்தாற் பவளமுந்தா னெவ்வா தென்று முரைப்பாரே. (கஅ)

சொற்கு.

வாகி னுறுதீம் பால்செந்தேன் வண்ணப் பசும்பூங் கிளியமுதம்
பாகு கரும்பு கற்கண்டோப் பாகும் யாழ்செங் கனிசீனி
யேகும் பூவை வரிச்சிறைவண் டிரக்கு மிசைகோ கிலங்குழலென்
றாகு மிவையீ ரேழுமினித் தருளுஞ் சொல்லுக் கிணையாமே. (௧௯)

கபோலத்திற்கும், நாசிக்கும்.

சந்தச் சாணை பரிக்கலனை சாரு மூக்கின் கண்ணாடி
யந்தக் கவுளி னுவமை சொல்ல லாமெட் பூவுங் குமிழரும்பு
முந்தக் கமழ்சண் பகவரும்பு முருக்கா ரிலவம் பூங்காம்பும்
பந்தக் கவிஞ ரெல்லோரும் பகர்வார் நாசிக் கிணையெனவே. (௨௦)

கண்ணிற்கு.

வேல்வா ளமுதங் கருக்குவளை வேலை மாவின் வடுவகிர்மான்
கோல்பங் கயமஞ் சமர்குடங்கை கூற்று விடங்காக் கணம்வண்டு
சால்பி னுறுகஞ் சனக்கயல்சேல் சகோரம் வழிபோய்க் குழையடர்ந்து
மால்வி தாதாச் சிவனுருவின் வயக்கும் விழிக்கொப் பிவையாமே. (௨௧)

கண்ணியல்பு.

செஞ்சு கறுத்த பேதைக்கு நிகழ்த்தும் விழிசெங் குமுதமொப்பாம்
வஞ்ச முறுகோ ரமுமிருந்த மயலும் பூட்டு மையலினாற்
றஞ்சு மதற்பி னெடுகெருமஞ் சூழ்ந்துகூர்மை நனியுடைத்தாய்
விஞ்சை மதனு கமவழியை விளக்குங் கடைக்கண் வேலாமே. (௨௨)

காதிற்கும், புருவத்திற்கும்.

நருபூ வள்ளை பொன்னூச னவில்கத் திரிகை சுராத்தலைமான்
புகும்வாய் கதவிற் பூட்டுதொடர் புகழுங்காதுக் குவமையதாத்
தருமே நீலாஞ் சனஞ்சலசத் தாளி னெடுசெங் காடிவில்லுஞ்
செருவா ளுறையுங் கடற்கரையுஞ் செப்பும் புருவ மொப்பாமே. (௨௩)

நுதலுக்கும், திலகத்திற்கும்.

அகத்தி யரும்பு வாசிகையு மனுகக் குனிக்கும் பூஞ்சிலையும்
பகுத்த பிறையுங் கொக்கிற்கும் பகருநுதலுக் கிணையாகும்
வகுத்த நுதலி விடுந்திலக மானுந் தினக ரோதயமுஞ்
சகத்துக் கிறைவர் நுதற்கண்ணுந் தயங்கு நாக ரத்தினமே. (௨௪)

கூந்தற்கு.

கொன்றைக் கனிகல் லார்மனமுங் கூந்தற் கமுகும் பொதுமாது
தன்ற னிதையஞ் சூன்மேகஞ் சவரி கருமை யடர் கங்குன்
மன்றல் கமழு மஞ்சனிப்பூ வயங்குஞ் சிறைவண் டினஞ்சோலை
துன்றல் வரும்பைம் புனல்கொழிக்குந் தூய வறலிந் திரநீலம். (உ௫)

இருள்சை வலமா முவைந்து மிணங்கு மிளைஞ ராருயிரு
முருகின் பலமென் னறும்பூவு மொக்கச் சொருகிக் கடைசுழன்று
வருமைச் சுழிவு போலுநெய்த்து வண்டூழ்ந்து குழைவார்ந்து
தருதேன் றுளிப்ப வழிக்கொழுகுந் தகரக் குழலுக் கிணையாமே. (உ௬)

பின்னிவிட்ட கூந்தற்கு.

கன்னிக் கமுகி னரும்பாளை கரிய பிடியா னைத்துதிக்கை
யென்னக் கூறு மதிப்பகையு மேய்க்கும் பிச்சி மருக்கொழுந்து
புன்னைப் பூச்செண் பகமுல்லைப் பூச்செவ் வந்தி பொலிந்திலங்கப்
பின்னுக் கழகாய் வகுப்பெடுத்துப் பின்னி விடும்பூங் குழற்கிணையே. (உ௭)

மதனிரத முதலியன.

இரதம் வசந்த மதயானை யிராவாம் பூவை பசுங்கிள்ளை
புரவி படைமங் கையர்வாசம் பொலியு மிணர்மென் பூஞ்சோலை
பரவு படைவீ டாமுரசு பரந்த கடலாங் கொடிமகா
மூரவா ரன்றில் காளமதா முயர்வெண் குடையிந் தனங்களுக்கே. (உ௮)

சொன்ன குடைக்கான் மதிகிரணஞ் சுரிமென் குழலார் முகசயன
முன்னும் வதுவை யவன்பரிசை யோங்கித் தளிர்க்கும் வெருகிலையாஞ்
சின்ன மிசைபூங் குயில் விளம்புந் தேரி னுருள்சந் தனச்சாணை
மன்னு நறுமாந் தளிர்பட்டா மகிழ்கைச் சாமா தளம்பூவே. (உ௯)

வெல்லு மதவேள் மார்பினிலே விளங்கு மாலை யிலஞ்சி மஞ்சள்
புல்லுங் கமுகி னரும்பாளை பொற்ப விட்டெஞ் சாமரையாஞ்
செல்லு மவன்கா ளாஞ்சிமலர் செண்ப கமுமல் லிகைப்பூவு
மொல்லும் வேனி லவன்றிருநா ளுடைவா ளோலைப் பூவாமே. (௩௰)

பதிக்கு மதனன் பரிக்கலனை பகரு நறும்பூ மல்லிகையாங்
கதிக்கு மிலஞ்சி கடிவாளங் கன்னச் சல்லி புன்னையம்பூ
மதிக்கு மவன்மெய் யிடெக்கவச மலிந்த விரைதோ ழன்வசந்தன்
விதிக்குப் பினவன் றேர்ப்பாகன் விரும்பு மகிண னெனலா[illegible] (௩௧)

* கதிர்ப்பூம் பச்சைத் தண்டும்வெறி கமழும் பரிய மாந்தண்டு
மதுக்கொண் டலர வழிந்தொழுகும் வாச முறுமல் லிகைத்தண்டுந்
துதிக்குங் கருப்பந் தண்டுமளி சூழுங் கமலப் பூந்தண்டும்
விதுத்தண் குடையானெடுத்தபஞ்ச வில்லென் றுணர்ந்தோர்சொல்வாரே.()

பிச்சிக் கொடியு மடல்விளங்கும் பிரசநறுந்தா மரைநாறு
மெச்சப் பொலிவின் மணம் வீசும் வெட்டிவேருங் கார்வண்டும்
பச்சைப் பசுமாந் தளிருமெனப் பகர்ந்த தனுக்க ளைந்தினுக்கு
மச்சக் கொடியோன் பூட்டியநாண் வகையீ தென்பர் தகவுடையோர். (௩௩)

சொற்று நறுமுல்லைப்பூவுந் தூவ சோகின் பூவுமிகக்
கற்றோர் புகழு மாம்பூவுங் கடிசேர் தண்டா மரைப்பூவும்
பொற்பா யலர்நீ லப்பூவும் போரின் மதவேள் செங்கையினாற்
பற்றுய்த் தொடுத்து நின்றெய்யும் பஞ்ச பாணத் தடைவிதுவே. (௩௪)

சிரின் முல்லை நேத்திரத்திற் றிகழ சோகு தனமீது
விரவு சூத மார்பினிடை விளங்கு முளரி வயங்குபொறி
யாவ படத்தி னறுநீல மனுகச் சமரிற் குறிநோக்கி
யுரவே ளைந்து கணையெய்தற் குற்ற தான மைந்தாமே. (௩௫)

எற்ற முல்லை இடைகாட்டு மெதிர்ந்த சோகு சென்றுபல
தோற்றங் காட்டி யுணவகற்றுஞ் சூத மடலிற் பசலைதருந்
தேற்ற முறுசெந் தாமரைப்பூச் சிந்தை யார நினைவிக்குங்
கூற்ற மனைய நறுநீலங் கொலும்வே ளம்பின் குணமிதுவே. (௩௬.)

மனதின் மோகஞ் செனித்தவுடன் மதனும் விரவி மனோபவமாய்த்
தனது சொரூப ரூபமெனுந் தன்மை தோன்ற மெய்பொலிந்து
வினவி யெழுந்து சன்னதமாய்ச் சிலையைக் குனித்து நாண்பூட்டி
யினமென் னறும்பூங் கணைதொடுத் தெய் து பூசல் செய்வானே. (௩௭)

---

* மதன் வில்வகை இவ்வாறேயன்றிச் "செந்தமிழ்" எ-வது தொகுதி முதற்பகுதி யிறுதியில் வேறு வகையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

பூவில், கருப்புவில், இருப்புவில் என மூவகை வில்லுள்ளன; இம்மூன்றில் தேவர்மேலெய்வது பூவில், மானுடர்மேலெய்வது கருப்புவில், இராக்கதர்மேலெய்வது இருப்புவில் எனக்கொள்க. இவற்றை, "கதியுடைத் தேவர்மேற் பூவின்மா நுடரின்மேற் கருப்புவி லிராக்கதரின்மேற் காமுறு மிருப்புவில்" என ஆசிரியநிகண்டு முதற்றொகுதி ௯-வது கவியிற் கூறி யிருத்தல் காண்க.

உவமானசங்கிரகம் முற்றிற்று.